விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள் : இருபது Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 02 சனிக்கிழமை (17.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இறுதி யுத்தம் தொடர்பில் மீண்டும் விசாரியுங்கள்!

## சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தல்

(லண்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் ஐக்கிய நாடுகள் சபை தமது பொறுப்புக்களை நிறைவேற்ற தவறியுள்ளமையால் அவ் இறுதி யுத்தம் தொடர்பில் பக்கச்சார்பற்ற வகையில் சர்வதேச விசாரணையொன்று மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடை மரண விசாரணையில் சர்வதேச கண்காணிப்பு அவசியம்-நாமல்

(கொழும்பு)

வெலிக்கடை மோதலின் போது கொல்லப்பட்ட கைதிகளின் மரண



விசாரணைகளின் போது சர்வதேச கண்காணிப்பு அவசியம் என குற்றவாளிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பின் தலைவரும் சட்டவாதியுமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றையதினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொள்ளும்போதே இது குறித்து தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், (19ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கிப் பணிப்பாளர் இன்று யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

உலகவங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஸ்ரீ.முலியானி இந்திராவதி இன்றையதினம் யாழ்ப்பா



ணம் விஜயம் செய்யவுள்ளார். யாழ். வயா (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங். எதிரான தீர்மானத்தை இந்தியா மீண்டும் ஆதரிக்கும்!

### இணையமைச்சர் நாராயணசாமி தெரிவிப்பு

(சென்னை)



ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக தீர்மாணம் கொண்டுவந்தால் இந்தியா அதனை மீண்டும் ஆதரிக்கும் என இந்தியா தெரிவத்துள்ளது.

சென்னை விமான நிலையத்தில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போது மத்திய இணையமைச்சர் நாராயணசாமி இதனைத் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலையை தடுக்காத பான் கீ மூனை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும்!

### இனியும் ஐ.நா. நடிக்கக் கூடாது - மனோ சீற்றம்



(கொழும்பு)

40,000க்கு மேற்பட்ட பெருந்தொகை அப்பாவி பொதுமக்களை பலி கொடுத்துதான் இன்னொரு பெருந்தொகையினரை காணாமல் போகச்செய்துதான் இலங்கை அரசாங்கம் புலிகளை ஒழித்தது என்ற உண்மையும் இது தொடர்பில் ஐ.நா. காத்திரமாக செயல்படாமல் பொறுப்புக்களிலிருந்து தவறிவிட்டது என்ற உண்மையும், சார்ல்ஸ் பெற்றி குழுவினர் ஆய்வு செய்து ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் கையளித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக அறிக்கையின் மூலமாக பகிரங்கமாகியுள்ளது.

இதன் மூலம் போரிட்ட இலங்கை அரசாங்கம், (02ஆம் பக்கம் பார்க்க)

## தலைமை நீதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை தவறானது

### மறுபரிசீலனை செய்ய ஐ.நா. கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கவை பதவிநீக்கம் செய்யும் ஒழுங்காற்று நடவடிக்கைகளை இலங்கை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் தனித்துவத்துக்கான ஐ.நா. மன்றத்தின் சிறப்பு பிரதிநிதி கேப்ரியல் க்னவுல் கோரியுள்ளார்.

அப்படி இல்லாத நிலையில் ஷிராணி பண்டாரநாயக்க மீதான ஒழுங்காற்று நடவடிக்கைகள் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் நியாயமான நடைமுறைகளின் அடிப்படையில் அமைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் நீதித்துறை குறித்து (19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பணியாளர்களை பாதுகாக்கவே அறிக்கையில் தணிக்கை செய்தோம்!

### நியாயப்படுத்துகிறார் ஐ.நா. அதிகாரி

(நியூயோர்க்)

இலங்கை தொடர்பான மீளாய்வு அறிக்கையின் சில பகுதிகள் தணிக்கை செய்யப்பட்டமை சரியானதே என ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு பொது மக்களைப் பாதுகாக்கத் தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்களை பாதுகாக்கவும், சில இரகசிய ஆவணங்களைப் பாதுகாக்கவும் மீளாய்வு அறிக்கையின் சில பகுதிகளை தணிக்கை செய்ததாக ஐக்கிய (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி-உலக வங்கி பணிப்பாளர் சந்திப்பு

(கொழும்பு)


நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஸ்ரீ.முலியாணி இந்திரவதிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. உலக வங்கியின் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் இன்றைய நிலை 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி'

### உதாரணமிடுகிறார் பிரபா எம்.பி.

(கொழும்பு)



இனப்பிரச்சினை தீர்வில் மேலதிகமாக பெறுவதனை விடுத்து இருப்பதை காப்பாற்ற முடியாத நிலையில் பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலையில் தமிழ் மக்களின் நிலைமை உள்ளது என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் (02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் மக்களின் இன்றைய நிலை....

பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலங்களில் இனப்பிரச்சினைத் தீர்வாக சமஷ்டி முறையினைக்கூட கொடுப்பதற்கு சிங்கள அரசு தயாராக இருந்தது.

இருப்பினும் விடுதலைப்புலிகள் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. எவ்வித தீர்வினையும் பெறாமல் விடுதலைப்புலிகள் வீழ்ச்சியடைந்தமை தமிழ் மக்களின் துரதிர்ஷ்டம். யுத்த வெற்றிக்கு பின்பு தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்குவதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை.

அவர்களது கோணத்தில் இருந்து பார்க்கும்போது தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்கிவிட்டால் அரசியல் செல்வாக்கு வீழ்ச்சியடையும் என்ற பயமுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தமிழ் மக்களுக்கு முறையான தீர்வினை வழங்க முற்பட்டால் ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள வாக்குகளை அபகரித்துக் கொள்ளும் முகமாக எதிர்ப்பினைத் தெரிவிப்பார்கள்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தீர்வினைக் கொண்டுவந்தபொழுது அது அதிகபட்சமான அதிகாரப் பரவலாக்கல் என்று ஜே.வி.பியுடன் இணைந்து ஐ.தே. க பாராளுமன்றத்தில் தீர்வின் பிரதியை தீயிட்டுக் கொளுத்தியதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

யுத்தம் முடிபடைந்து இந்திய வெளியுறவு அமைச்சரின் வருகைக்குப் பின் ஜனாதிபதி தனது வாயாலே 13 பிளஸ் கொடுக்கப்படும் என்று அறிவித்திருந்தார். அதனைப் பெற்றுக் கொள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்குள் வருமாறு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அப்பொழுது விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் 13-வது திருத்தச் சட்டம் அகற்றப்படவேண்டும் என கூக்குரல் இடவில்லை.

ஒன்றரை வருடங்களுக்கு முன்பு கூட்டமைப்பினர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குள் சென்றிருந்தால் 13 பிளஸ் ஐ பற்றி விவாதித்திருக்கலாம்.

அரசாங்கம் அதிலிருந்து விலகியிருக்காது. இன்று நிலைமை தலைகீழாக போய்விட்டது.

13- ம் திருத்தச் சட்டத்தை அகற்ற வேண்டும் என அரச பங்காளிக் கட்சிகள் மட்டும் அல்ல அரசாங்கமும் முற்படுகிறது.

இந்நிலையில் பேச்சுவார்த்தை எவ்வாறு சாத்தியப்படும் என புரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியும் 13 -வது திருத்தச் சட்டத்தை அகற்றக் கூறும் அமைச்சர் விமல் வீரவன்சவைச் சந்தித்து அவருக்கு அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

சிங்கள பேரினவாதம் இன்று தலைதூக்கியுள்ளது.

கிடைத்த சந்தர்ப்பங்களை பற்றிப் பிடிக்காமல் சர்வதேச தலையீட்டை மட்டுமே நம்பியிருந்தமையினால் இன்று பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலைக்கு இலங்கைத் தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சாணக்கியமான சில ராஜதந்திர முயற்சிகளை கூட்டமைப்பினர் எடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

வெறுமனே பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவதும் வெளியில் ஊடகங்களுக்கு அறிக்கை விடுவது மட்டும் எவ்வித பிரயோசனமும் இல்லை. இன்றைய அபாயகரமான நிலையில் கட்சி பேதம் இன்றி அனைத்து தமிழ் அரசியல் தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். (ந-11)

# படுகொலையைத் தடுக்காத....

புலிகள் ஆகிய இரண்டு தரப்பினருடன் சேர்ந்து ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனும் குற்றவாளி கூண்டில் நிற்கிறார் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

படுகொலைகளை தடுக்கும் பொறுப்பில் இருந்து தவறியமைக்காக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனை, உலக நீதிமன்றத்தில் நிறுத்த முடியுமா என உலகத் தமிழர்கள் ஆராய வேண்டும். இப்படியான படுகொலைகள் உலக வரலாற்றில் நடந்துள்ளன. இது முதன் முறை அல்ல. ஆகவே ஐ.நா நாடகம் நடிக்க முடியாது. புதிய பாடம் படிக்கிறேன் என பான் கீ மூன் பள்ளிக்குப் போக முடியாது.

படுகொலைகள் தொடர்பிலும் சர்வதேச விசாரணை நடத்துவதும், தண்டனை வழங்குவதும் ஒரு விடயம். ஆனால் இங்கே இலங்கையில் இது தொடர்பான நடைமுறை நிலைமைகள் கவலையளிக்கின்றன.

அரசாங்கம் படுகொலைகள் நடந்துவிட்டன என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் புலிகள் என்ற கருத்தை சிங்கள மக்களுக்கு சொல்லி வருகிறது. அப்பாவி மக்கள் உயிர் தப்புவதற்கு கடைசி சந்தர்ப்பம் வழங்க தாம் மறுத்துவிட்டோம் என்ற குற்றச்சாட்டை ஒப்புக் கொள்ள மறுக்கிறது.

போர்க் குற்றம் என்பதை ஒருபுறம் வைத்து விட்டுப் பார்த்தாலும் போருக்கு அடிப்படைக் காரணமான தேசிய இனப்பிரச்சினையை நேர்மையாகத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் மறுத்து வருகின்றமை கண்கூடாகத் தெரிகிறது.

புலிகள் தான் ஒரே தடை ;யுத்தம் முடியட்டும்; தேசிய இனப்பிரச்சினையை உடன் தீர்க்கிறோம் என உலகத்திற்குத் தந்த வாக்குறுதிகளை அரசாங்கம் மீறுகிறது.

அத்துடன், தானே அமைத்து முன்வைக்கப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் சிபார்சுகளைக்கூட அமுலாக்காமல் தவிர்க்கிறது.

ஆணைக்குழு அறிக்கையில் அரசு ஏற்றுக் கொண்டிருந்த, கடத்தப்பட்டு அல்லது சரணடைந்து காணாமல் போனவர்களின் பெயர்பட்டியலைக்கூட குறைந்த பட்சம் வெளியிடுவதற்கு மறுக்கிறது.

இந்நிலையில், தவறுவிட்ட ஐ.நா இனி மேலும் தொடர்ந்து அமைதி காக்க முடியாது.

2009 மே மாதம் யுத்தம் முடிந்த பின் சில நாட்களில் இலங்கை வந்த பான் கீ மூன், இலங்கை ஜனாதிபதியுடன் இணைந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டார்.

யுத்தத்தின்போது மக்களுக்கு நடந்த அதே கதிதான் ;இந்தக் கூட்டறிக்கைக்கும் ஏற்பட் டுள்ளதா என இன்று ஐ.நா செயலாளர் நாயகத்திடம் கேட்கிறோம் என மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். .(ந-11)





ஆசிரியர் முத்துலிங்கத்தின்
**EASY ENGLISH**
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்
(930)

**பிள்ளையார் இன்**
இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
50% கழிவு
இன்றைய விசேட உணவு :-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-
(C-1518) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



அரசியலில் வெள்ளி விழாவும், வாழ்வில் பொன் விழாவும் கண்ட செயல்வீரன்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர்
அரசின் சிறுதொழில், குடிசைக் கைத்தொழில் அமைச்சர் உயர்திரு
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களை வளர்க! வாழ்கவென வாழ்த்துகின்றோம்.!

நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி

Dr.திருமதி ம.சரோஜினிதேவியும்
கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும்
(சி-1537)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும், உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.No:-0212225392
(சி-1538)

**வீட்டுக் கிருத்திய அழைப்பு**



கடந்த 18.10.2012 வியாழக்கிழமை
இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர்
அமரர்
**தம்பிமுத்து சந்திரசேகர்**
( நேரக்கணிப்பாளர், யாழ் மினிபஸ், தென்மராட்சி )
அவர்களின்
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
17-11-2012 இன்று சனிக்கிழமை
அன்னாரது இல்லத்தில்
நடைபெறும். அதனைத் தொடர்ந்து
மு.பகல் 12.00 மணியளவில் எமது
இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தகவல் :
குடும்பத்தினர்.
மகன் பிரதீப் ( ஜொனி )
(982)

உடனடி வேலைவாய்ப்பு

**Easy Way**

யாழ்ப்பாணம், நெல்லியடியில் இயங்கிவரும் Canadian International நிறுவனமானது தன்னுடைய புதிய கிளைக்கு 20 பேரை உள்வாங்கவுள்ளது. மேற்படி பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை.

✔ Distributors ✔ Crew Managers
✔ Supervisors ✔ Administration

முந்தும் 20 பேருக்கு 6 மாத பயிற்சிக் காலத்தின் போது ரூபா. 8,000 ற்கு மேற்பட்ட சம்பளமும் பின்னர் ரூபா.36,500 சம்பளமும் வழங்கப்படுவதோடு தங்குமிட வசதியும் இலவசமாக வழங்கப்படும்.

தகைமை : க.பொ.த. சாதாரண தரம் (O/L)

Contact :
077 1518168, 077 215 1014
(நெல்லியடி) (யாழ்ப்பாணம்)
(983)


## BID NOTICE
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna will receive sealed bids from the qualified contactors for the following works.

| Work/ Service Details | Non-refundable Deposit (Rs) (Bid fee) | Security Deposit (Rs) | Approximate Direct cost of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Repair of OPD Injection Room and Pediatrics Department Roof | 1000.00 | 15,000.00 | 1.3 | C9 |
| Repair of OPD Admission Section Roof | 1000.00 | 25,000.00 | 2.1 . | C8 |

Bid forms may be obtain from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Office, Teaching Hospital, Jaffna till 22/11/2012.

Perfected bid should be sealed and mark with the and the name of the work on the top left corner of the envelop and send by registered post to reach the Director, Teaching Hospital, Jaffna or could be deposited in the bid box kept at Director Office, Teaching Hospital, Jaffna.

Bids will be accept till 10.00 am on 23/11/2012 and open immediately thereafter. Bidders or theirs accredited representatives could be present at the time of opening of bids.

Bids forms may be inspected by the bidders free of charge at the residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

Director (Chairman)
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
16.11.2012

(C-1545)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எங்கே நிம்மதி...?

" என்ன சேர் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று ஒருவரைக் கேட்டேன்.

" நிம்மதி எங்கே இருக்கிறது என்று தேடிக்கொண்டிருக்கின்றேன்" என்றார்.

" என்னுடன் வாருங்கள்... அது இருக்கும் இடம் எங்குள்ளது என்பதை நான் சொல்கின்றேன்" என்று கூறி அவரை அழைத்துக் கொண்டு வந்து அமர வைத்தேன். அவரிடம் கூற ஆரம்பித்தேன்.

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவர் தனது நாட்டிற்குச் செய்யவேண்டிய அனைத்துக் கடமைகளையும் ஒழுங்காகத் தான் செய்தார். இருந்தாலும் அவருக்கு நிம்மதியில்லை. எப்போது பார்த்தாலும் ஏதாவது பிரச்சினையை பற்றி கதைத்துக் கொண்டிருப்பார்.

அரசனுக்கு வெறுத்து போய்விட்டது. என்ன செய்யலாம்? என்று யோசித்தார்.

அயலில் இருந்த காட்டிலே சென்றால் ஏதாவது வழி பிறக்கும் என்று ஆலோசனை கூறினார்கள்.

உடனே அவர் புறப்பட்டு அங்கே போனார். அந்த பெரியவரைப் பார்த்தார். அவரது காலிலே வீழ்ந்தார்.

"ஐயா... அரசாங்கத்தை நிர்வகிப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது" என்றார்.

" அப்படியானால் அதை விட்டுவிடேன் " என்று பெரியவர் கூறினார்.

"நான் விலகினால்... அதன்பின் அரசாங்கக் காரியங்களை யார் கவனிக்கிறது?" என்று மன்னர் கேட்டார்.

"உனது பிள்ளையிடம் அந்த பொறுப்பை ஒப்படைத்து விடு என்றார். " ஒப்படைத்தால் நான் என்ன செய்வது என்று கேட்டார்.

" காட்டிற்கு வந்து என் அருகில் உட்காரு- நிம்மதி இங்கு கிடைக்கும்" என்றார்.

அந்தபின் அந்த ராஜா யோசனை செய்தார். " என்ன யோசனை...?" என்று அவர் கேட்டார்.

" ஒன்றுமில்லை... என்மகன் ... மிகவும் சிறிய பையன் ... என்னால் தாங்கமுடியாத அரச பாரத்தை அவன் எப்படி தாங்குவான் என்று யோசிக்கிறேன்" என்றார்.

"அப்படியானால் ... அதை என்னிடம் கொடுத்து விடு ..." என்றார். "சரி" என்று ராஜா ஒத்துக்கொண்டார்.

" சத்தியம் செய் என்று பெரியவர் கேட்டார்.

இவரும் அப்படியே சத்தியம் செய்து கொடுத்தார்.

"சரி... இராச்சியத்தை என்னிடம் கொடுத்துவிட்டு இனிமேல் நீ என்ன செய்யப்போகிறாய்?" என்றார்.

" அரண்மனை கருவூலத்திலே இருந்து சிறிதளவு பொன் எடுத்துக்கொண்டு வெளிதேசம் போய் அங்கே ஏதாவது வியாபாரம் செய்து பிழைத்துக்கொள்ளப் போகிறேன்" என்றார்.

" அரண்மனைக் கருவூலம் இப்போது எனக்குச் சொந்தம். அதில் இருந்து எப்படி பொன்னோ, பணமோ எடுக்கமுடியும்? " என்றார்.

" சரி... எங்கேயாவது போய் ஏதாவது வேலை செய்து பிழைத்துக்கொள்கிறேன்" என்று ராஜா கூறினார்.

வேலை செய்ய வேண்டும் என்று நீ முடிபு செய்து விட்டாய். அதனை ஏன் இங்கே செய்யக்கூடாது என்று கேட்டார்.

எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள் என்று ராஜா கேட்டார்.

பெரியவர் வேலை கொடுத்தார். ராஜாவைப் பார்த்துக் சொன்னார்;" இதோ பார் ! நீ ஏற்கனவே ராஜாவாக இருந்து பழக்கப்பட்டவன் ...அதனாலே எனக்கு பதிலாக நீ இந்த இராச்சியத்தை கவனித்துக்கொள் . நீ செய்யும் வேலைக்கு ஊதியம் தருவேன்" என்று கூறினார்.

ராஜாவும் அவர் கூறிய படி செய்தார். முன்பு என்ன செய்து கொண்டிருந்தாரோ... அதையே தான் இப்போதும் செய்கிறார்... ஆனால், கவலை இல்லாமல் நிம்மதியாக இருந்தார்.

என்னுடைய கடமையை நான் செய்கிறேன். இந்த அரசாங்கம் என்னுடையதல்ல என்ற நினைப்புத்தான் அந்த நிம்மதிக்கு காரணமாகும்.

ஒரு மாதம் கடந்த நிலையில் அந்தப் பெரியவரை ராஜா சந்தித்தார்.

"புதுவேலை எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"நிறைவாக... நிம்மதியாக இருக்கிறது." என்று ராஜா கூறினார். அரசு உன்னுடையது என நினைத்த போது அவதி... அது உன்னுடையது அல்ல என்று தெரிந்த போது நிம்மதி...

பற்றில்லாமலே கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே இதுதான் நிம்மதிக்கு வழி... இதை புரிந்து கொள்ள வேண் டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்தேன் என்றார் பெரியவர்.

நாமும் அதைப் புரிந்து கொண்டால் நல்ல படியாக வாழலாம். புரிந்து கொள்ளத் தெரிய வேண்டுமே....

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# 13 ஆவது திருத்த சட்ட மூலம் இரத்து; நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல

## ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

13 ஆம் திருத்தச் சட்டத்தில் எவரும் தலையீடு செய்ய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுமதிக்கக் கூடாது என தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ் வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, தேசிய இனப் பிரச்சினை பற்றிய பின்னணி பற்றி பிழையான கருத்துக்களை வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்பட வேண்டுமென கோரிக்கை வலுப்பெறுவது நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் முடிவுறுத்தப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நாட்டில் அமைதி நிலை நாட்டப் படவில்லை என அவர் தெரிவித் துள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மக்கள் தொடர்ந்தும் பீதியுடன் வாழ்ந்து வருவதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஜப்பானிய நிதியுதவியால் செயற்றிட்டங்கள் கையளிப்பு

## ஜப்பான் தூதுவர் கையளிப்பார்

யாழ். சமூக செயற்பாட்டுமையம் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் தெல்லிப்பழை பிரதேச செயலகப்பிரிவில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் வசதி, வாழ்வாதார உதவி வழங்கல் ஆகிய செயற்றிட்டங்களின் இரண்டாம் கட்ட கையளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வலித்தூண்டல் புனித அன்னம்மாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க வளாகத்தில் வைத்து ஜப்பானிய தூதுவர் Nobuhito Hobo மூலம் உரிய சமூக அமைப்புகளிடம் கையளிக்கப்படவுள்ளதாக யாழ் சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந. சுகிர்தராஜ் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் குடிநீர் வசதி செயற்றிட்டமானது 9 இலட்சத்து 24 ஆயிரத்து 417 ரூபாவிலும் வாழ்வாதார உதவி வழங்கல் செயற்றிட்டமானது 4 மில்லியன் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 780 ரூபாவிலும் அமையப்பெறவுள்ளது. (இதற்குள் கடற்றொழில் உபகரணங்களான கட்டுமரம்,வெளியிணைப்பு இயந்திரம் ,வலை என்பன அடங்கும்) . (அ-2-9)

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

திருகோணமலை ஸ்ரீகோணலிங்கப் பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.15 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை இதற்கான கிரியைகள் ஆரம்பமாகுமெனவும் மறுநாள் வெள்ளிக்கிழமை நண்பகல் 12.20 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையுள்ள சுபவேளையில் புதிய மூலஸ்தானத்திற்கான அடிக்கல் நாட்டுதலும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 200 | 130 |
| உருளைக்கிழங்கு | 110 | 100-120 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 170 | 180 |
| தக்காளி | 60 | 90 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 100 | 110 | 120 |
| கரட் | 100 | 120 | 200 |
| பூசணி | 50 | 60 | 60 |
| புடோல் | 80 | 90 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 90 | 160 | 130 |
| லீக்ஸ் | 90 | 110 | 120 |
| பீற்றூட் | 40 | 80 | 40 |
| கறிமிளகாய் | 100 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 160 | -- |
| போஞ்சி | 80 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 110 | 150 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 180 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 32 | 40 | 30-35ள |

# இராசி பலன்

*17.11.2012*
*(கார்த்திகை 02, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு*
*சதுர்த்தி முன்னிரவு 7.23 மணிவரை*
*மூலம் முற்பகல் 9.19 மணிவரை*
*இராகுகாலம் 9.08-10.38 மணிவரை*
*சுபநேரம் 3.08-4.38 மணிவரை*
*சதுர்த்தி விரதம்*

**மேடம்**



தடைகள் அகன்று காரியங்கள் நடைபெறத் தொடங்கும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பயணங்களால் பலனுண்டு, தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்**



வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், அடுத்தவர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, போசன சுகமுண்டு.

**மிதுனம்**



களஸ்திர நன்மையுண்டு, உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்**



சுப செய்திகள் வந்து சேரலாம், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொழில் நன்மையுண்டு, வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம்.

**சிங்கம்**



சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்ட நாளைய கோரிக்கைகள் நிறைவேறலாம், சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கன்னி**



பொருளாதார நிலை உயர என்ன வழியென்று நினைப்பீர்கள், பெற்றோரின் பாசப்பிணைப்புக்கள் அதிகரிக்கும், பேச்சில் கனிவு பிறக்கும், பக்குவமாக நடந்து பாராட்டுப்பெறும் நாள்.

**துலாம்**



எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், எதிலும் சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், சேமிப்புக்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்**



குடும்ப மகிழ்ச்சி கூடும், உறவினர் வருகையுண்டு, நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தன வரவுகள் திருப்திகரமாக அமையும், உஷ்ண நிலையுண்டு.

**தனுசு**



மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மகரம்**



காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், இடமாற்றங்களால் இனிய மாற்றம் ஏற்பட வேண்டிய நாள், வீட்டை அழகுபடுத்துவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்**



உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைக்கும் நாள், தொழிலில் புதிய கூட்டாளிகளை இணைக்கும் எண்ணம் உருவாகும், எடுத்த முயற்சியால் வருமானம் அதிகரிக்கும்.

**மீனம்**



பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உற்சாகமான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு வருடங்கள் பழமையான பிள்ளையார் சிலை திருட்டு

(பொற்பதி)


வெற்றிலைக்கேணி முள்ளியான் மண்டலாய் பிள்ளையார் ஆலயத்தின் நூறு வருடங்களுக்கு மேற்பட்ட பிள்ளையார் சிலை களவாடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது, 1901 ஆம் ஆண்டு கட்டப்பட்டு வைக்கப்பட்ட பிள்ளையார் சிலை கடந்த வாரம் களவாடப்பட்டுள்ளதாகவும் இந்த ஆலயச்சூழல் இராணுவத்தினரின் பிடிக்குள் இருந்து சில மாதங்களின் முன்பே மக்களின் வழிபாட்டுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்

மேலும் இவ்வாறு விடுவிக்கப்பட்ட இந்த ஆலயத்தை பாலஸ்தாபன நிகழ்வு மேற்கொள்வதற்காக அவ்வாலயத்தில் சிறியளவு புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

கதவு பூட்டப்பட்டுள்ள நிலை யிலேயே அந்தக்கதவு உடைக்கப்பட்டு இச் சிலை திருடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலுமுள்ளஇந்துஆலயங்களின்சிலைகள்திருடப்படுவது தொடர்கதையாகவே உள்ளது. (அ-3-64)




# சம்பளம் வழங்கப்படாததை கண்டித்து பருத்தித்துறை இ.போ.ச.வில் ஆர்ப்பாட்டம்

## எழுத்து மூலம் உறுதிமொழி தரும் வரை போராட்டம் தொடரும்

(கரவெட்டி)

வடமராட்சி பருத்தித்துறை இ.போ.ச. பேருந்து சேவை நேற்று இடம்பெறாமையால் வடமராட்சி உள்ளூர் இடங்களுக்கு செல்பவர்களும் வெளி மாவட்டங்களுக்கு செல்பவர்களும் எனப் பல ஆயிரக்கணக்கானோர் நிர்க்கதியான நிலையில் இருந்ததை அவதானிக்க முடிந்தது. பருத்தித்துறை இ.போ.ச. பேருந்துசாலையில் பணியாற்றும் 160 ஊழியர்களுக்கு இம்மாத சம்பளம் இதுவரை வழங்கப்படாமையால் நேற்றுக்காலை 8 மணி தொடக்கம் இ.போ. ச. பேருந்துசாலையின் முன் கதவை மூடி பேருந்தை நிறுத்தி அதன் மேல் ஏறி கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


யாழ். மாவட்டத்திலே அதிக வருமானம் உள்ள சாலையாக பருத்தித்துறை இ.போ.ச பேருந்துசாலை விளங்குவதாகவும் இங்கு மாதம் ஒரு கோடி 20 இலட்சம் ரூபா வரை வருமானம் கிடைப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

நாளொன்றுக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவரை தமது சாலை ஊடாக கோண்டாவில் பேருந்துசாலைக்கு அனுப்பி வைப்பதாகவும் சாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் எமது ஊழியர்களுக்கு மாதாந்தம் 36 இலட்சம் மட்டுமே சம்பளமாக வழங்கப்படுகிறது.

இந்நிலையில் கடந்த மாதம் வழமை போன்று எட்டாம் திகதி வழங்கப்பட வேண்டிய சம்பளம் காலதாமதமாக வழங்கப்பட்டமையால் தமது பணியாளர்கள் ஒரு மணித்தியால பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தம்மிடம் உரையாடி கூட்டம் ஒன்றை நடத்தினர்.

இக்கூட்டத்தில் எதிர்வரும் மாதங்களில் எட்டாம் திகதி சம்பளம் வழங்குவதாகவும் உறுதியளித்தனர்.


படம்: செல்வதீபன்

ஆனால் நேற்றுவரை சம்பளம் வழங்கவில்லை. இது தொடர்பாக வடமாகாண போக்குவரத்து சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு தாம் கேட்ட போது சம்பளம் சாலை ஊடாகவே வழங்கப்படும் என்றும் அதை மீறி போராட்டத்தில் பணி நீக்கம் செய்யப்படுவீர்கள் அல்லது இடமாற்றம் செய்யப்படுவீர்கள் என்று தம்மை அச்சுறுத்தியதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஊழியர்கள் சாலையின் வாசலை மூடி அதன் முன் பேருந்தை நிறுத்தி பேருந்தின் மேல் ஏறிய பணியாளர்கள் நாம் உழைக்கும் பணம் எங்கே? அது உங்கள் வீடுகட்டுவதற்கா? எங்கள் குடும்பம் பிச்சை வாழ்க்கை; உங்கள் குடும்பம் சொகுசு வாழ்க்கையா? உங்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம்; எங்களுக்குரிய நேரத்தில் என்ன ? என்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ்.பிராந்திய செயலாற்றும் முகாமையாளர் கே. கேதிசன், நிர்வாக உத்தியோகத்தர் கே.யோகராசா, பிராந்திய கணக்காய்வாளர் எஸ் செவ்வந்திராஜா, பிராந்திய பாதுகாப்பு முகாமையாளர் என்.சிவபாதம் ஆகியோர் சாலைக்குள் நுழைய முற்பட்டபோது அதனை ஊழியர்கள் தடுத்து உள்நுழையவிடாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தலையிட்ட பருத்தித்துறை இ.போ.ச பேருந்து சாலை முகாமையாளர் கே.கந்தசாமி தம் உயர் அதிகாரிகளை உள்ளே வரவழைக்க முற்பட்டபோதும் பணியாளர்களின் கடும் எதிர்ப்பால் அது கைகூடவில்லை.

இதன் போது குறித்த உயர் அதிகாரிகள் நால்வரும் ஊழியர்களினால் திருப்பியனுப்பட்டனர். இச்சம்பவத்தினால் நேற்று யாழ்.குடாநாடு முழுவதும் பருத்தித்துறை சாலை ஊடான போக்குவரத்து பேருந்து துறையில் நெரிசல் காணப்பட்டதாகவும் பலபேர் பேருந்துகள் இன்மையால் நீண்டதூரம் நடந்து சென்றதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

சம்பளத்தை உரிய திகதிக்கு வழங்குவதாக எழுத்து மூலம் உறுதியளிக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என இ.போ.ச பேருந்து சாலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

நேற்று இ.போ.ச. சாலை முன்பாக எதுவித அசம்பாவித்மும் இடம்பெறாத வகையில் பருத்தித்துறை பொலிஸார் பாதுகாப்பை வழங்கினர். (அ-3-24)

# ஜப்பானிய தூதரகத்தின் இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

ஜப்பானிய தூதரகத்தின் இசைக்கச்சேரி நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கெய்கோ கோபயசியின் இசைக்கச்சேரியே நடைபெறும். (அ-9)

# சோமவார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சோமவார உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூஜையும் சுவாமி உள்வீதி வலம் வருதலும் நடைபெறும். (அ-9)

# இளைஞர் கழகங்களை பதிவு செய்ய நடவடிக்கை

(துளங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்டத்தின் 2013 ஆம் ஆண்டுக் கான பழைய இளைஞர் கழகங்களையும் புதிய இளைஞர் கழகங்களையும் பதிவு செய்யும் நடவடிக்கை ஒவ்வொரு பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர்களாலுல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பதிவுகள் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளனதால் விரைவாக ஒவ்வொரு பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தரிடம் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா கேட்டுள்ளார். (அ-3-37)




# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர் II பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை திருநகர் மாணவர் படிப்பகத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30மணி வரை திருநகர் மாதா கோயிலடியிலும் வைத்து வழங்கப்படும் (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த கிடைத்த சந்தர்ப்பத்தை அரசு பயன்படுத்த வேண்டும்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

ஐக்கிய இலங்கைக்குள் நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான தீர்வொன்றைக் காண்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு பூரண ஆதரவை வழங்கத் தயாரென ஆர்.சம்பந்தன் எம்.பி.பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான ஐந்தாவது நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இனப் பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பான அரசாங்கத்தின் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக அமைய வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அவர், தமிழர்கள் எந்த இனத்துக்கோ சமூகத்து க்கோ எவ்விதத்திலும் பங்கம் விளைவிப்பவர் களல்ல என்பதையும் வலியுறுத்திக் கூறினார்.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

தமிழ்மக்களின் நம்பிக்கையை வெல்வதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் கிடைத்த சந்தர்ப்பத்தை அரசாங்கம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். இன, மத ஒற்றுமை மக்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதாக ஜனாதிபதி தனது உரையில் கூறியிருந்தார்.

இதனை மேலும் பலப்படுத்துவதாயின் அரசாங்கம் உறுதியளித்த பல்வேறு விடயங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையானது சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் உட்பட அனைவருக்கும் உரித்தான நாடு.

தமிழர்களாகிய நாம் எமது நாட்டுக்கோ அல்லது ஏனைய இன மக்களுக்கோ பங்கம் ஏற்படுத்தமாட்டோம். அனைவரும் எமது சகோதர,சகோதரிகள். அவர்களுடன் நட்புடன் வாழவே விரும்புகின்றோம். தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். அவ்வாறு எமது அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட்டால் எமது உள்நாட்டு விவகாரத்தில் வேறு எந்த நாடும் தலையிடுவதை நாம் விரும்பமாட்டோம்.

ஜனாதிபதி உட்பட பல நாட்டுத் தலைவர்களும் அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசியுள்ளனர். அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் மாற்றம் செய்வதற்கோ அல்லது அதனை நீக்குவதற்கோ நடவடிக்கை எடுத்தால் அது 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தினால் ஏற்படக்கூடிய நன்மையை இல்லாமல் செய்துவிடும். எனவே, 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்தி அதனை மேலும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பது அவசியம் என தெரிவித்தார்.(அ-2)

## பாம்பை துன்பப்படுத்தியமைக்கான வழக்கை நீதிமன்று ஒத்திவைத்தது

(கொழும்பு)

பாம்பை நினைத்தபடி சாப்பிடவிடாமல் அதற்கு இடையூறு விளைவித்து அதன் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவித்ததாக விலங்குவதை தடைச்சட்டத்தின் கீழ் நிரோஷா விமலரத்ன திலானிக்கு எதிராக கொழும்பு,கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸாரினால் நேற்று முன்தினம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

கொள்ளுப்பிட்டியிலுள்ள இரவு விடுதியொன்றில் வெள்ளைநிற நாக பாம்புடன் நடனமாடிய 25 வயதான நிரோஷா விமலரத்ன திலானி என்ற யுவதிக்கு அந்த பாம்பை கொடுப்பதா?இல்லையா?என்பது தொடர்பில் நவம்பர் 15ஆம் திகதி தீர்ப்பு வழங்குவதற்கு கொழும்பு,கோட்டை நீதவான் நீதிமன்றம் ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி தீர்மானித்தது.

இதன்படி மேற்படி வழக்கு விசாரணை கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்பட்ட போது கொள்ளுப்பிட்டி பொலிஸார் பாம்புக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை. இந்நிலையில், குற்றச்சாட்டுக்கள் ஏதும் இருப்பின் அதனை முன்வைக்குமாறு நீதவான் கடந்த விசாரணையின் போது அறிவித்திருந்தார்.

இந்நிலையில் நிரோஷா விமலரத்ன திலானி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி ஹர்ஷ குலரத்ன பாம்பு விஷ ஜந்துக்கள் வகையைச் சேர்ந்ததாக இருந்தாலும் அதனை வளர்ப்பதற்கு தடை இல்லை என்பதுடன் அந்த பாம்பின் மீது தனது தரப்பைச் சேர்ந்தவர் அன்பு செலுத்துகிறார். ஆதலால் அந்த பாம்பை விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு மறுப்பு தெரிவித்த பொலிஸார் செல்லப்பிராணியாக நாய், பூனைகளை வளர்ப்பதைப் போன்று பாம்பை மேற்படி பெண் செல்லப்பிராணியாக வளர்த்து வருகிறார் என்று நீதிமன்றத்தின் கவனத்துக்கு அன்று கொண்டு வந்தனர்.

இந்நிலையில் விசாரணையின் போது நஜா நஜா என்ற விஞ்ஞான பெயரை கொண்ட குறித்த பாம்பை சந்தேக நபரான இந்த பெண் தான் நினைத்தபடி சாப்பிடவிடாமல் தடுத்தார். அதன் வளர்ச்சியை குந்தகம் விளைவித்தார், துன்பத்தை விளைவித்தார், பாடுபடுத்தினார் போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே விலங்குவதை தடைச் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தனர்.

இந்நிலையிலேயே குறித்த வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த கொழும்பு,கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் பாம்பைக் கொடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் அன்றைய தினம் அறிவிப்பதாக தெரிவித்தார்.(அ-2)

## ஜனாதிபதி கசகஸ்தானுக்கு பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கஸகஸ் தான் நாட்டுக்கு அடுத்த வாரம் விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலாத்துறை உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதே இந்த விஜயத்தின் பிரதான நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கசகஸ்தான் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (அ-2)


அருள்மிகு எல்லியடி தடங்கன்புளியடி
முருக மூர்த்தியாலய
கந்தசஷ்டி 5 ஆம் நாள் உற்சவகால
சிறப்பு நாதஸ்வர தவிலிசை கானாமிர்தம்

காலம் : 18.11.2012 ஞாயிற்றுக்கிழமை
பி.ப.1 மணி - 03.15மணிவரை ஆலய வெளிமண்டபத்திலும்
பி.ப.3.30 - 6.00 மணிவரை வசந்தமண்டப பூஜை
உள்வீதியுலாவின்போதும்

நாதஸ்வர வித்துவான்கள்
1. கோண்டாவிலூர் நாதஸ்வர வித்துவான் வி.கே.பஞ்சமூர்த்தி
2. வழக்கம்பரையூர் நாதஸ்வர வித்துவான் ஆர்.சிவகுமார்

தவில் வித்துவான்கள்
1. தமிழ்நாடு கோவிலூர் கே.ஜி.கல்யாணசுந்தரம்
2. என்.நந்தகுமார்
3. பி.எஸ்.செந்தில்நாதன்
4. எம்.எஸ்.தெட்சணாமூர்த்தி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பரிபாலனசபையினர், உபயகாரர்
(சி-1544)



YARL Taxi
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919
(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)
இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்
36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com


## கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனிசிசக் கட்சி ஏற்பாடு செய்த கூடங்குளம் அணு உலை மின் நிலைய அபாயத்திற்கெதிரான மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக இடம்பெறவுள்ளது.

இதில் மக்கள் நலன்களில் அக்கறையுள்ள அரசியல் சமூக, பொது அமைப்புக்கள் கலந்து கொள்ளவுள்ளதாக பொதுச் செயலாளர் சி.கா. செந்தில்வேல் அறிவித்துள்ளார். (அ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1972 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரம் 1<br>உயரம்:- 5'6"<br>கி.பா:-29.5, 2 இல் செவ்.<br>தொழில்/தகைமை:-O/L (சொந்த வியாபாரம்) B/273 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- மகம் 2<br>உயரம்:-5'3"<br>கி.பா:- 57.75<br>தொழில்:- விஞ்ஞான பட்டதாரி (Bsc) பயிலுநர் பட்டதாரி(அரச) G/366 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கேட்டை 1<br>உயரம்:-6'<br>கி.பா:-32.5, 12 இல் செவ்.<br>தகைமை/ தொழில்:-ACCA(UK) Bsc (இலங்கை)MBA(UK) Msc கடைசி வருடம் (கணக்காளர்(UK) B/274 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூராடம்<br>உயரம்: 5'5"<br>கி.பா:-18.5<br>தகைமை: A/L(maths) CIMA Foundation Diploma in Computer G/386 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-விசாகம் 2<br>உயரம்:-5'9"<br>கி.பா:-23, 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்:-Msc Engineering B/280 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூசம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா:- 36.5, 2 இல் செவ்.<br>தகைமை:- BA, (Hons) முகாமைத்துவ உதவியாளர் G/518 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 4<br>உயரம்:-5'3"<br>கி.பா:-17<br>தகைமை:- BBA (Jaffna) msc (UK) UK (Work pemit) Store manger B/281 | பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ரோகினி 4<br>உயரம்:- 5'2"<br>கி.பா:-22<br>தகைமை/தொழில்:- A/L ஆங்கில ஆசிரியை (தேசிய கல்வியற் கல்லூரி) G/115 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
செவ்வாய்க்கிழமை விடுமுறை
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் பயன்தரும் மரங்களும் வேளாண் காடுகளும்

மரங்களின் பயன்பாடுகள் பற்றி விரிவாக ஆராயும் பகுதியிது. இதுவரையிலும் மரத்தின் பயன்கள் பற்றி பார்த்திருக்கின்றோம். எமது வாழ்வியலுடன் மரங்களின் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்திருக்கின்றமையை நாம் இன்னும் உணராதுவிடில் அது உயிரற்ற உணர்வுமற்ற பிண்டத்திற்கு சமன். உயிரிருந்தும் உயிரிழந்தும் உணர்வில் கலந்த உயிரிது.

மரங்களென்றவுடன் நிழல் தான் நினைவுக்கு வருகின்றது. ஆனால் அதற்கும் மேலாக அது தரும் உணவு, நீர், றின் மூலம் இறைவனுக்கு நேர்ந்திருப்பவரை கொளுக்கியால் குத்தி அதில் தொங்கவிடுவர். போதாக்குறைக்கு அந்த பனை மர சலாகைகளின் மேலேறி தூக்குக் காவடியெடுத்திருப்பவரை மேலும் கீழுமாக அசைத்துக் கொண்டிருப்பார். இவ்வளவு பாரத்தையும் தாங்குவதற்கு பனை மரத்துக்கு வீரியமுண்டு.

பனையினடியில் பனையின் பொருட்களின் பயன்களை அனுபவித்து விட்டு வசதியேற்படும் போது அதனை வெட்டி சாய்த்து விடுகின்றோம். கற்பகதருவென்ற சிறப்புக் யும் இன்னும் அழித்துக் கொண்டிருக்கிறோம்.

இழந்தவை போக இருப்பனவற்றையாவது பேணிப்பாதுகாக்க முன்வருவோமா. அழித்துக் கொண்டவைபோக ஒருபக்கத்தில்நடவுசெய்து கொள்ள வேண்டும். நாமாக நடவு செய்தல் என்பதை விட யாருடைய கவனிப்புமின்றி விழுந்த பனம் பழங்களிலிருந்து ஒருபகுதி முளைத்திருக்க இன்னுமொரு பகுதி அந்த பழங்களை மாடுகள் உணவாக உட்கொள்ள விடுவர்.

இவ்வாறு எதேச்சையாக அங்குமிங்கு



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
**விவசாய உயிரியல்துறை**
**விவசாய பீடம்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

24-IV

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

இலை, மட்டை, தண்டு, வேர், காய், கனி என அனைத்து பாகங்களும் பயனாகும் பல்தருமரங்களின் நன்கொடையை, தற்கொடையை என்னவென்பது. பனை, தென்னை, கமுகு ஆகிய மூன்றும் ஒரே குடும்பத்து மரங்களென்பதனையுந் தாண்டி அவற்றினது பயன்கள் பலவாறாகும். இம்மரங்களின் அடியொற்றி வாழ்ந்த இன்னும் இம்மரங்களிலேயே தங்கி வாழும் மக்களுக்காக இவற்றை இன்னும் விருத்தி செய்ய வேண்டியுள்ளது.

தென்னையின் பயன்கள் அளப்பரியது. ஒருவித்திலை மரமாயினும் தனது நாருருவேரின் உதவியுடன் ஓங்கி வளர்ந்திருக்கும் தன்னம்பிக்கையை, காற்று ஓங்கியடிக்கும் போது எதிர்த்து நின்ற வீறாப்பினை இன்னும் எழுதலாம். குறிப்பாக பனை, தென்னையை இதற்கு உதாரணமாக்கலாம். வேர்கள் மட்டும் நாருரு தன்மையுடையதோடு தண்டுப் பகுதியிலும் நார்த் தன்மையிருப்பதனை உணரலாம்.

பனையிலிருக்கும் நார்த்தன்மையைப் பயன்படுத்தி நம்மவர் தூக்குக் காவடி கட்டுவதற்காக உழவு இயந்திரத்தின் பெட்டியில் பனை மர சலாகைகளை வரிசைக்கு கட்டி அதிலே உழண்டியிட்டு, கயிற் குரிய பனை மரத்தின் பயன்கள் பலவாகும். தெரிந்தவற்றையும் ஏனைய வற்றையும் இதில் தருவது பொருத்த மானது ஆகும்.

பனைவளத்தை எக்காவமும் நாம் அழியவிடக் கூடாது. இது எங்களது சொத்து. அதற்கும் மேலாக எங்களது அடையாளம் என்றால் மிகையாகாது. நடந்து முடிந்த போரில் அகப்பட்டு தலையிழந்த பனைகள் அதிகமாகும்.

எகிறிப்பாய்ந்த எறிகணைகளை தடுத்தால் தம் தலையிழந்த பனைகள் எமதுயிரை காத்தனவல்லவா. இன்னும் இந்த அடையாளத்தை முகமாலைப் பகுதியை கடந்து செல்லும் போது அவதானிக்கலாம். தலையிழந்து நிர்க்கதியாயிருக்கும் இம் மரங்களில் கூடுகட்டி கிளிகள் உல்லாசமாக குடியிருக்கின்றன.

இழந்து விட்டோம் பல பனைகளை என மனம் ஆதங்கப்பட்டாலும் காப்பரண்களுக்காக பல இன்னும் அழிக்கப்பட்டன. இன்னும் ஓய்ந்த நிலையிலேயே இருக்கும் இவை தடுப்பு சுவராக என்றும் இருக்கும்.

போர் ஓய்ந்து வசந்தம் வீசும் இந்நாட்களில் அபிவிருத்திக்கான கட்டுமான பணிகளுக்கு மீண்டும் பனை, தென்னை மரங்களை வெட்டிச்சரித்து இருக்கும் வளத்தை மாக விழுந்து முளைத்தவை அனைத்தும் வளர்ந்து பற்றைகளாயிருக்கின்றன.

இந்த இளம் பனைகளிலிருந்து குறிப்பாக இலைத் தண்டு பகுதியிலிருந்து நார் பிரித்தெடுக்கப்படும். எங்களூரில் இவ்வளவில் இருக்கும் இவ்வளத்தை வினைத்திறனான வழியில் நாரினை பிரித்தெடுக்க பயன்படுத்தலாம்.

பனையின் பயன்களாக அதிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு உலகத்தரம்வாய்ந்த அழகிய பொருட்களை விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் இணைந்து உருவாக்குதல் சிறந்தது.

பனையின் அனைத்துப் பயன்களும் எமது குடிசைக் கைத்தொழிலின் பயனுக்கும் விருத்திக்கும் ஒத்தது. அதனை சீர்படுத்தி நெறிப்படுத்தல் மிக அவசியமானது.

பனையோலையின் பயன்பாடு மிகவும் அரியது. ஏட்டுச் சுவடிகளால் கல்வி கற்பிப்பது சிரமம். ஆகவே அதிலுள்ள எழுத்துக்களை புத்தக வடிவிலிருத்த முயற்சி செய்ய வேண்டும்.

பனையோலையிலிருந்து பல உருவங்கள், பெட்டி, பாய், உறி, சுளகு இவ்வாறு பல வற்றை உருவாக்கலாம்.

இங்கே பனையோலையை பதப்படுத்தி அவரவர் தேவைக்காக பயன்படுத்துவர்.

குறிப்பாக வயது வந்த பெண்மணிகள் வீடுகளிலேயிருந்து ஓய்வு நேரத்தில் இவற்றை உருவாக்குவர். ஓரிரு சந்ததி போக இவற்றை உருவாக்குவது கூட மறந்து போகலாம். எங்களின் முன்னோர் விட்டுச் செல்லும் இவ்வரிய பொருட்களை சேகரித்து ஆவணப்படுத்தும் முயற்சியில் நாம் இறங்க வேண்டும்.

அத்துடன் இவற்றின் பயன்பாடுகள் பற்றி இளையவருக்கும் பயிற்றுவிக்கப் பயன் வேண்டும். இன்னும் இல்லத்தரசிகளுக்கு இன்னும் உதவியற்றிருக்கும் எவருக்கும் இவற்றை பயிற்றுவித்து இவை அழியாது பாதுகாக்க வேண்டும்.

பல பயன்தரும் மரங்களின் தன்மையை எடுத்தியம்பினால் மாத்திரமே அவற்றை மேலும் பாதுகாக்க வழி செய்யலாம். இது விடயத்தில் பனை ஆராய்ச்சி நிறுவனம் இன்னும் கைகொடுக்கலாம். பனையின் பருவ வளர்ச்சிப் பருவங்கள் எமக்கு மேலும் பயன்பட பல உத்திகளை உள்வாங்கி அதன் பயன் பெற்று வாழ்வோம்.

# டிரான் அலஸ் எம்.பிக்கு பரிசுகொடுப்பேன்!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் கின்னஸ் சாதனை படைத்துள்ளதாகவும் இந்த சாதனைக்காக அவருக்கு பரிசு ஒன்றை வழங்கவுள்ளதாகவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றை விடுத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், நாடாளுமன்றத்தில் இரண்டு வருடங்களுக்கு பேசுவதை தவிர்த்து வருவதன் மூலம் ஜனநாயகத் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் உலக சாதனை படைத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் 2010 ஆம் ஆண்டிலிருந்து நாடாளுமன்றத்தில் பேசுவதில்லை.

இவரின் இந்த சாதனைக்காக பரிசு ஒன்றை வழங்கவுள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார். இதனால் அவையில் சிரிப்பொலி எழுந்தது.

(அ-2)

# இலஞ்சம் பெற்ற இரு அதிகாரிகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

இலஞ்சம் பெற்ற குற்றத்தை ஒப்புக் கொண்ட இரண்டு அரச அதிகாரிகளின் பொது உரிமைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் இவ்விரு அதிகாரிகளுக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவை அதிகாரி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சபையின் பரிசோதனை அதிகாரி ஆகியோருக்கே முறையே 24 ஆயிரம் ரூபாயும் 75 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டதுடன் 7 வருடங்களுக்கான பொது உரிமைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய அவர்கள் 7 வருட காலப் பகுதியில் தேர்தல்களில் போட்டியிடுவதற்கோ அல்லது தேர்தல்களில் வாக்குபதிவு செய்வதற்கோ தகுதியிழப்பதோடு குறித்த அதிகாரிகளின் குடும்ப உறுப்பினர்களும் அரசசேவையில் இணைவது தடை செய்யப்பட்டுள்ளது.

அரிசியை அதிகூடிய சில்லறை விலையிலும் அதிக விலைக்கு விற்றமை, காலாவதியான குளிர்பானங்களை விற்றமை தொடர்பில் சட்டநடவடிக்கை மேற்கொள்ளாது இருக்க 20 ஆயிரம் ரூபாவினை கேட்டு 15 ஆயிரம் ரூபாவினை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரி பெற்றுள்ளார்.

இதேவேளை சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வல்லவெளி பிரதேச குடியிருப்பு ஒன்றிற்கு நிவாரணம் வழங்குவதற்கு முஸ்லிம் ஒருவரிடம் இருந்து 40 ஆயிரம் ரூபாவினை சமூகசேவை அதிகாரி பெற்றுள்ளமை தொடர்பிலேயே நீதிமன்றத்தால் குறித்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

# காலநிலை மாற்றம் பற்றிய சர்வதேச மாநாடு இலங்கையில்

(கொழும்பு)

இலங்கையில் காலநிலை மாற்றம் பற்றிய சர்வதேச பாராளுமன்ற மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியை கிளைமேற் பார்லிமென்ட் என்ற அமைப்பு ஏற்பாடு செய்கிறது.

இன்றும் நாளையும் நடைபெறும் மாநாட்டில் ஆசிய, ஆபிரிக்க மத்திய நாடுகளைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்கள் கலந்து கொள்வார்கள்.

காலநிலை மாற்றத்தால் உலகளாவிய ரீதியில் ஏற்படக்கூடிய சவால்களை வெற்றி கொள்ளும் வழிவகைகளைக் கண்டறிவது மாநாட்டின் நோக்கமென ஐக்கிய நாடுகள் சபையின் பிராந்திய தொழில்நுட்ப பிரதிநிதி பி.எச். டி. புச்சையா தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்வலு எரிசக்தி அமைச்சின் ஆலோசகர் அசோக அபேகுணவர்த்தன உரையாற்றுகையில்,

இலங்கை மூன்றாம் உலக நாடு என்ற ரீதியில் நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் பிரவேசிக்கும் சமயத்தில் காலநிலை மாற்றங்கள் குறித்து கவனம் செலுத்துவது அத்தியாவசியமானது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழ் அகதி தற்கொலைக்கு முயற்சி

அவுஸ்திரேலியா சிட்னியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் ஒருவர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

குறித்த நபர் இலங்கையில் இருந்து படகு மூலம் 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவுஸ்திரேலியா வுக்கு சென்றுள்ள நிலை யில் அந்த நாட்டுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று தெரிவித்தே தடுத்து வைக்கப்பட்டி ருந்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை 2.40 மணியளவில் கயிற்றால் கழுத்தை நெரித்து அவர் தற்கொலைக்கு முயற்சித்தமையை அவதானித்த ஆப்கானிஸ்தானிய அகதி ஒருவர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த அகதியை அவுஸ்திரேலிய அதிகாரிகள் காப்பாற்றியுள்ளனர். இவர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் மாரலி பிரிநொங் தடுப்பு முகாமில் இருந்து சிட்னிக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை கடந்த இரண்டு கிழமைகளுக்கு முன்னரும் நாடு கடத்தப்படவிருந்த இலங்கை தமிழர் ஒருவர் தற்கொலைக்கு முயன்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



மாத்தறை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் பெருந்தோட்டங்களை அண்மித்து வாழும் தமிழ் மக்களின் இல்லங்களை நிர்மாணிப் பதற்கு சீமெந்து மற்றும் ஏனைய பொருட்கள் பெற்றுக் கொடுக்கும் செயல் திட்ட மொன்று சமாதி மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அக்குறெஸ்ஸ தேர்தல் தொகுதியில் கியாண்டுவ கிராமசேவைப் பிரிவில் வாழும் நன்மை பெறுவர்களுக்கு மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் புத்திக பத்திரண பொருட்கள் அன்பளிப்பு செய்வதை படத்தில் காணலாம்.

# அரசியல்வாதிகள் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த முயற்சி

## பா.உ.சுவாமிநாதன் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் உள்விவகாரங்களில் வெளிநாட்டு சக்திகள் தலையீடு செய்யத் தேவையில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,வரவு செலவு திட்டம் என்பது சிறந்த பொருளாதாரமொன்றை கட்டியெழுப்ப வழியமைக்க வேண்டும்.வரவு செலவுத்திட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை.

சிறைச்சாலை சம்பவத்தின் போது நிர்வாகக் கோட்பாடுகள் பின்பற்றபடவில்லை. தமிழ் மக்கள் இந்த நாட்டின் ஏனைய இன சமூகங்களை விடவும் இழிவானவர்கள் அல்ல.

நாட்டின் தமிழ்,சிங்கள மக்கள் நட்புறவுடன் வாழ்ந்து வருகின்றனர்.அரசியல்வாதிகள் மக்களிடையே பிளவினை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையில் நீதித்துறை பாதுகாக்கப்பட வேண்டும்

## ஐ.நா.சபை கோரிக்கை

இலங்கையின் நீதிபதிகளையும் சட்ட வாக்குநர்களையும் அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள். சபை கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நீதித்துறைக்கான விசேட நிபுணரான பிரேசிலின் காப்ரெல்லா நூல் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்..

இலங்கை அரசாங்கம் நீதித்துறையை சேர்ந்தவர்களை பாதுகாப்பதற்கான சட்ட முறைகளை வகுப்பதுடன் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் காப்ரெல்லா வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் இலங்கையின் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணை குறித்து மீண்டும் இலங்கை அரசாங்கம் ஆலோசனை செய்யவேண்டும் என்றும் காப்ரெல்லா கோரியுள்ளார்.

இதேவேளை நீதித்துறையின் காப்பாளர்களாக நீதிபதிகளே இருப்பதாகவும் பிரேசில் நிபுணர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இரு அரசசார்பற்ற நிறுவனங்கள் 881077 கருக்கலைப்பு செய்துள்ளன

## சட்டநடவடிக்கை எடுக்க ஞானசார தேரர்

(கொழும்பு)

இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் கடந்த 26 ஆண்டுகளில் சுமார் 8இலட்சத்து 81 ஆயிரத்து 077 கருக்கலைப்புக்களை மேற்கொண்டுள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலபொட்ட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

இதில் 8 இலட்சத்து 77 ஆயிரத்து 963 கருக்கலைப்புச் சம்பவங்கள் உபகரணங்களைப்பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. ஏனைய கருக்கலைப்புச்சம்பவங்கள்மாத்திரைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்களும் சிங்கள பெண்களுக்கு குடும்ப கட்டுப்பாட்டு சத்திரசிகிச்சை மேற்கொண்டு வருகின்றன.

இதன்மூலம் சிங்கள இனத்தை இல்லாதொழிக்க சர்வதேச சூழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.இந்த சூழ்ச்சித் திட்டத்தில் தமிழ் மக்களும் பலிகடாவாக்கப்பட்டுள்ளனர்.

சில வைத்தியர்கள், குடும்பநல உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு இந்த முயற்சிக்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.இந்த இரண்டு அரசசார்பற்ற நிறுவனங்களிடம் 800 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் காணப்படுகின்றது.

அவற்றை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# முஹர்ரம் மாதம் இன்று ஆரம்பம்

ஹிஜ்ரி 1434ஆம் ஆண்டு முஹர்ரம் மாதத்தின் தலைப்பிறை இன்று நாட்டின் எப்பாகத்திலும் தென்படவில்லை. இதனால் துல்ஹஜ் மாதத்தை 30 ஆகப்பூர்த்தி செய்து அன்று சனிக்கிழமை முஹர்ரம் மாதம் ஆரம்பிப்பதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பிறைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை ஸபர் மாதத்தின் தலைப்பிறை பார்க்கும் தினம் (முஹர்ரம் பிறை 29)எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதியாகும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கந்தசஷ்டி விழா

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தின் கந்தசஷ்டி விழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சூரசம்காரமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் 21 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளதாக தேவஸ்தானம் அறிவித்துள்ளது. (அ-9)



யாழ்.பாஷையூரில் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் நிதியுதவியுடன் இறங்குதுறையொன்று அமைக்கபட்டு வருகிறது.இந்தப் பகுதி மீனவர்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைவாக குறித்த இறங்குதுறையை அமைத்துக்கொடுக்க தனியார் நிறுவனமான ஐ.ஓ.எம். முன்வந்துள்ளது. குறித்த இறங்குதுறையை அமைக்கும் பணி இடம்பெறுவதை படத்தில் காணலாம். (படம்:-எஸ். ஆர்.கரன்)

# மானாவரி நெற்செய்கைக்கு இதுவரை பசளை கிடைக்கவில்லை

## விவசாயிகள் குற்றச்சாட்டு

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்பாசனம் மூலமாகவும் மானாவரி பயிர்ச்செய்கை மூலமாகவும் விவசாயிகளால் பெருமளவிலான நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீர்ப்பாசன மூலம் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மானிய உதவித்திட்டம் மூலம் வழங்கப்படுகின்ற பசளை வகைகள் உரிய காலத்தில் கிடைக்கபெறாமையால் விவசாயிகள் அல்லற்பட வேண்டியுள்ளது.

கடந்த சிறுபோகத்தின் போது வரட்சியினால் உரிய விளைச்சலைப்பெற முடியாது கஷ்டப்பட்ட விவசாயிகள் இக்காலபோக பயிர்ச் செய்கை மூலம்தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றனர். இருந்தபோதிலும் உரிய காலத்தில் பசளை வகைகள் கிடைக்கப்பெறவில்லை. குறிப்பாக ஒரு மாதத்திற்கு மேலாகியும் முதற் கட்ட அடிக்கட்டு பசளையைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையே உள்ளது.

ஏற்கனவே கமக்கார அமைப்புக்கள் மூலம் விவசாயிகளின் பசளைப் பட்டியல்கள் நேர காலத்துடன் வழங்கப்பட்ட போதும் உரிய காலத்தில் பசளைகளை பெற்றுத் தரவில்லை என்று விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்துக்கள் சீரான முறையில் நடைபெறும் இக்காலகட்டத்தில் பசளை கொண்டு வரப்படுவதற்கு காலதாமதம் ஏன்? என விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இவ்விடயத்தில் உடனடி கவனம் எடுத்து தேவையான பசளை வகைகளை சிரமமின்றி கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(அ-3-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.குடா போருக்குப் பின்னர் 27சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது

## மத்திய வங்கி ஆளுநர் புகழாரம்

(கொழும்பு)

**மத்திய அரசாங்கத்தின் மீது தங்கியிருக்காது மாகாண சபைகள் தமது முயற்சியில் வருமானத்தை ஈட்டி அபிவிருத்தியை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 15ஆவது ஆளுநர் மாநாட்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட 'மாகாண சபைகள் ஊடாக பிராந்திய அபிவிருத்தி சந்தர்ப்பங்களும் சவால்களும்' என்ற தொனிப் பொருளில் சிறப்புரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

போருக்குப் பின்னரான மூன்று ஆண்டு காலப் பகுதியில் வடபகுதி 27 வீதம் வளர்ச்சியடைந்துள்ளது. இந்த வளர்ச்சியின் ஆதாரங்களாக இங்குள்ள வீதிகள், வைத்தியசாலைக் கட்டடங்கள், மக்களின் வாழ்க்கைத் தரங்கள் என்பவற்றைக் கூறலாம்.

மாகாண சபைகளுக்கு அவைகளின் அபிவிருத்திக்கேற்ப எதிர்வரும் காலங்களில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என நிதி ஆணைக்குழு அண்மையில் ஒரு தீர்மானத்தினை கொண்டு வந்தது.

மாகாண சபையின் அபிவிருத்திக்கு மத்திய அரசாங்கத்திடமே நிதி கோரப்பட்டு வருவதாக மாகாண சபைகள் மீது குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையிலேயே இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடுவதற்கு ஒவ்வொரு மாகாணங்களும் தங்கள் சுயமுயற்சியில் வருமானத்தையீட்டி அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் வெளிநாடுகளில் சிறிய நீர் வீழ்ச்சியுள்ள இடங்களை சுற்றுலாத் தளமாக மாற்றி அதனூடாக பல மில்லியன் டொலர்களை வருமானமாக பெறுகின்றார்கள். எம்மிடம் பெரும் நீர்வீழ்ச்சிகள் பல இருந்த போதும் இதனை சுற்றுலா தளமாக மாற்றி வருமானத்தை ஈட்ட நாங்கள் முன்வரவில்லை.

இவ்வாறு சுற்றுலா பயணிகளை கவரக் கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றின் மூலம் நாங்கள் வருமானங்களை ஈட்டிக் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ - 2)

# குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும் சைவப் பெருவள்ளலாருமான சேர்.பொன்.இராமநாதனின் குருபூசைத் தின விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7மணி முதல் 8.30மணிக்கு இடையில் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பார்வதி சமேத ஸ்ரீபரமேஸ்வரப் பெருமானுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும் விசேட பூஜையும் நடைபெறும்.

தொடர்ந்து 8.30மணிக்கு பல்கலைக் கழக வளாகத்திலுள்ள அவரது உருவ சிலைக்கும், கலா மண்டபத்தில் உள்ள அவரது படத்திற்கும் துணைவேந்தர் வசந்தி அரசட்ணம் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தவுள்ளார். (அ - 9)

# பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவு


(கொழும்பு)

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனர் சின்னத்துரை விக்னேஸ்வரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் புறக்கோட்டை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு கொழும்பு பிரதம நீதவான் ரஷ்மி சிங்கபுலி முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் மைத்துனர் சின்னத்துரை விக்னேஸ்வரனை கொலை செய்தார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்தேக நபரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை சந்தேகநபரின் தொலைபேசி உரையாடல்களை ஆராய்வதற்கு கால அவகாசம் தேவையென பொலிஸார் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதனையடுத்தே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார். (அ - 2)



மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளையில் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற குலுக்கல் முறையில் 'சிசு உதான' கணக்கைப் பேணிய ரி.மேரிறொமி அதிர்ஷ்டசாலியாக தெரிவானார்.

இவருக்கான 50ஆயிரம் ரூபாவினையும் 'சிசு உதான' பரிசுப் பொருட்களையும் பருத்தித்துறை சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ்.லுமினா, பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் ஆகியோர் இணைந்து வழங்குவதையும் நடுவில் வங்கி உதவி முகாமையாளர் ஏ.ஹரிகேசன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம் :- பருத்தித்துறைச் செய்தியாளர்)

# ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட 38 மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

கம்பளை, பன்விலதன்ன வித்தியாலயத்தைச் சேர்ந்த 38 மாணவர்கள் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடல் அரிப்பு, மயக்கம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இவர்கள் கம்பளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் இந்த மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களில் சுமார் 7பேர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தை அடுத்து கம்பளை, உடபலாத்த பிரதேச சுகாதாரப் பிரிவினர் குறித்த பாடசாலைக்குச் சென்று பரிசோதனைகளை நடத்தியுள்ளனர். இருப்பினும் இந்த ஒவ்வாமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கம்பளை ஜினராஜ கல்லூரியிலும் நேற்று முன்தினம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் இவ்வாறானதொரு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ - 2)

# இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் அவசியம்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது பொதுமக்களை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் அமைப்பு தவறியுள்ளதாக வெளியான அறிக்கையைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுக்களை வலுப்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளதாகக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும், பிரதானமாக குற்றம் சுமத்தப்படும் அரசாங்கத்தின் விசாரணைகள் பொருத்தமற்றது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச சுயாதீன விசாரணைகள் தொடர்பான கோரிக்கைகளை கடந்தகாலங்களில் இலங்கை அரசாங்கம் நிராகரித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் விசாரணை செய்யப்பட வேண்டியதில்லை என எவரும் தெரிவிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (அ - 2)

# தெற்கு நெடுஞ்சாலையில் பொழுதுபோக்கு நிலையங்கள்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வழியே வெலிப்பனையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உணவகங்கள், மருத்துவக் குளியலகங்கள், சிறுவர் பூங்காக்கள் என்பன இன்னும் சில வாரங்களில் பொது மக்கள் பாவனைக்காக திறக்கப்படவுள்ளன.

இவற்றுக்கு மேலாக எரிபொருள் நிலையங்கள், ஆடை விற்பனை நிலையங்கள், வாகன தரிப்பிடங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் என்பவையும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவை இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் உப நிறுவனங்களான ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் றிசோட்ஸ் மற்றும் ஸ்பாஸ் லிமிட்டெட் என்பவற்றால் முகாமைத்துவம் செய்யப்படவுள்ளன.

இதேவிதமாக மாக்கும்புர நகரத்தையும் அபிவிருத்தி செய்யும் திட்டங்களும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் அங்கு இன்னும் கூடுதலான வசதிகள் இருக்கும் என்றும் இந்த திட்டங்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பாக இருக்கும் என்றும் கூறப்படுகின்றது. (அ - 2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

104

### இராஜாதி இராஜசிங்கள்

கண்டி மன்னனின் ஒத்துழைப்பைப் பெறும் நோக்கமாக ஆங்கிலேயர் றொபேட் அன்றூஸ் என்ப



இராஜசிங்கன்-கண்டி மன்னன்

# ஆங்கிலேயர் காலம்

வன் கண்டிக்கு அனுப்பப்பட்டான். கண்டி மன்னனைச் சந்தித்த அன்றூஸ் சென்னையிலுள்ள ஆள்பதியுடன் உரையாடி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்காக இரண்டு பொறுப்பான தூதுவர்களைத் தன்னுடன் அனுப்பி வைக்கும்படி கோரினான். அவ்வாறு ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதில்- ஆங்கிலேயர் கண்டி மீது படையெடுக்க மாட்டார்கள். மீன் பிடிப்பதற்கும் உப்பு விளைவிப்பதற்கும் துறைமுகங்களை கண்டி மன்னன் ஆங்கிலேயருக்கு வழங்கல், வர்த்தகம் செய்வதற்கு ஆங்கிலேயரின் கப்பல்களைக் கண்டி மன்னன் உபயோகிக்கலாம். இந்த ஒப்பந்தத்தை கண்டிப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டனர். மன்னனிடம் ஒப்பம் பெறுவதற்கு 1796 ஆம் ஆண்டு அன்றூஸ் சென்றபோது மன்னன் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். அவ்வேளை ஆங்கிலேய ஆள்பதியாக இலங்கையில் பிறட்றிக் நோர்த் என்பவன் விளங்கினான்.

### பிலிமத்தலாவை

கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் அரசசபையில் மகா அதிகாரி பிலிமத்தலாவையின் செல்வாக்கு அதிகமாகவிருந்தது. ஏனெனில் பிலிமத்தலாவை தன் மகளை மன்னனுக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தான். தன் மகளைப் பட்டத்து ராணியாக்குவான் என்று நம்பியிருந்தான். ஆனால், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனோ அவளை அரண்மனைப் பெண்களில் ஒருத்தியாக ஆக்கிக் கொண்டான். பெண் கொடுத்த மாமன் என்று பிலிமத்தலாவைக்கு உரிய மரியாதையும் செய்யவில்லை. அதனால் பிலிமத்தலாவை நர்யக்கப் பிரதானிகள் பலரை அவர்களது பதவிகளிலிருந்து நீக்கினான். பிலிமத்தலாவையின் உள்ளெண்ணங்களையும் சூழ்ச்சிகளையும் ஓரளவு புரிந்து கொண்ட மன்னன் பிலிமத்தலாவையின் அதிகாரங்களைப் படிப்படியாகக் குறைத்தான். அதனால் கோபமுற்ற பிலிமத்தலாவை ஆங்கிலேய நோர்த்துடன் தொடர்பு கொண்டான். தானே கண்டி மன்னனாக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை அமர்த்தியதாகவும் அந்தச் சிம்மாசனம் தனக்குரியதென்றும் அதனைப் பெற்றுத் தருமாறும் உதவி கோரினான். நோர்த் அவன் கோரிக்கைக்கு இணங்கவில்லை. எனினும் பிலிமத்தலாவையின் உறவை முறித்துக் கொள்ளவும் விரும்பவில்லை. ஸ்ரீ விக்கிர இராஜசிங்கனுக்கு உண்ணாட்டில் ஆபத்து வரவிருப்பதாகத் தெரிவித்து ஆங்கிலேயப் படை ஒன்றைக் கண்டியில் வைத்திருக்க அனுமதி கேட்டான். அதனை அனுமதிக்காத மன்னன் ஆபத்து வருவதாகவிருந்தால் அது ஆங்கிலேயரால்தான் வரும் என்று பதிலனுப்பினான். கண்டியைக் கைப்பற்றும் எண்ணம் ஆங்கிலேயருக்கு



கண்டி மன்னனின் தூதுவர்கள்

இருந்தது. கண்டி சிம்மாசனத்தில் அமர்ந்துவிட வேண்டுமென்ற பேராசை பிலிமத்தலாவைக்கு கடைசிவரை இருந்தது.


அவ்வேளை கண்டி இராச்சியத்தின் இரண்டாவது மகா அதிகாரம் இறந்ததும் இவ்விடத்துக்கு எகலப்பொலையை அரசன் நியமித்தான். இறந்த அதிகாரத்தின் ஆட்சிப் பகுதியை இரண்டாக்கி மொலிக்கொடை என்பவனுக்கும் ஒரு பகுதியை நிர்வகிக்க நியமித்தான். பின்னர் அப்பதவி ரத்வத்தை என்பவனுக்கு வழங்கப் பட்டது. இந்த ஒழுங்கு பிலிமத்தலாவைக்குப் பிடிக்கவில்லை. தன்னை மன்னன் மதிப்பதில்லை எனத் தன் மனக்கிடக்கையை மன்னனிடம் முறையிட்டபோது, "என்னிடம் நீ ஆணை பெறுவதை விடுத்து, உன்னிடம் மன்னனாகிய நான் ஆலோசனை பெற வேண்டும் என நீ விரும்புகிறாய்" என கேலி புரிந்தான். இவற்றைப் பொறுக்க முடியாத பிலிமத்தலாவை மன்னனை அவன் படுக்கையில் கொல்ல காவல் பணியில் இருந்த மலாய் வீரர்களைத் தூண்டிவிட்டான். அச்சதி வெற்றி பெறவில்லை. ஆங்கிலேய ஆள்பதி நோர்த்துக்கும் கண்டி மன்னனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டால்தான் கண்டி மீது படையெடுப்பு நடக்கும் எனப் பிலிமத்தலாவை எண்ணினான். முதலில் தன் செல்வாக்கை ஆங்கிலேயருக்கு உணர்த்தும் வகையில் கண்டியில் ஒரு கலகத்தைத் தோற்றுவித்தான். அக்கலக்கத்துக்குப் பிரதானிகள் பலர் ஆதரவளிக்கத் தவறியதால் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனால் இலகுவில் அக்கலகம் அடக்கப்பட்டது. அவ்வேளையிலும் மகா அதிகாரியான பிலிமத்தலாவையைப் பதவியிலிருந்து நீக்கிவிட மன்னனுக்குத் துணிச்சல் வரவில்லை.



இராஜாதி இராஜசிங்கன் -கண்டி மன்னன்

கண்டி இராச்சியத்துக்கு ஆங்கிலேயரின் பிரதேசங்களிலிருந்து சோனக வியாபாரிகள் உப்பு, கருவாடு, புகையிலை, துணிவகை முதலான பொருட்களை எடுத்து வந்து கணடியிலுள்ள பாக்கு, கறுவா என்பனவற்றுக்குப் பண்டமாற்றுச் செய்து ஆங்கிலேயருக்கு விற்பது வழக்கமாகும். சோனக வியாபாரிகள் பாக்குடன் திரும்பிக் கொண்டிருக்கையில் பிலிமத்தலாவையின் ஆட்கள் அவற்றைக் கொள்ளையடித்தனர். ஆங்கிலேய ஆள்பதி கண்டி மன்னனிடம் கொள்ளையடிக்கப்பட்ட பாக்குகளுக்கு நட்டஈடு கொடுக்க வேண்டுமென வற்புறுத்தினான். மன்னன் நட்டஈடு கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால் அதனை ஒரு சாக்காக வைத்து ஆள்பதி நோர்த் கண்டி மீது 1803 ஆம் ஆண்டு படையெடுத்தான். மக்டோவலின் தலைமையிலிருந்து 1700 வீரர்களைக் கொண்ட ஒரு படை கொழும்பிலிருந்தும், கப்டன் பாபுட் தலைமையில் 1200 பேர் வீரர்களைக் கொண்ட ஒரு படை திருகோணமலையிலிருந்தும் கண்டி நோக்கிப் புறப்பட்டன. கண்டி கைப்பற்றப்பட் டது. விக்கிரம இராஜசிங்கன் ஹிங்குரான் கெற்றைக்குத் தப்பி ஓடினான். தன்னைக் கண்டியின் அரசனாக்கும்படி பிலிமத்தலாவை கோரியபோது அதனை நிராகரித்த ஆங்கிலேயர், தங்களிடம் ஏற்கனவே அடைக்கலம் புகுந்திருந்த முத்துச்சாமியை கண்டியின் அரசனாக்கினான். தப்பியோடிய ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைப் பற்றி எதுவித கவலையும் கொள்ளாது முத்துச் சாமியை அரசனாக்கினர்.

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா



சூரிய அரியணை


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

283



## பொய்ச்சாட்சி

### அம்புலிமாமா கதைகள்

கமலாபுரத்தில் வசித்துவந்த இளைஞன் வீராவுக்கு பொய் பேசுவது கை வந்த கலையாக இருந்தது. சிறுவயதிலேயே தந்தையை இழந்த வீராவை அவன் தாய் மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்தாள். இதனால் அநாவசியமாகப் பொய் சொல்லும் திறமையை வளர்த்தது. பக்கத்து ஊர்களில் சென்று தான் டாக்டர் என்றும் சில சமயம் தான் வழக்கறிஞர் என்றும் சில சமயம் பொலிஸ் அதிகாரி என்றும் விதவிதமாக தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு ஊரை ஏமாற்றி மக்களை ஏமாற்றி சம்பாதித்து வந்தான்.

ஒருநாள் அவனை கிராமத்து நாட்டாமை கூப்பிட்டார். வீரா எத்தனை நாட்கள்தான் நீ இப்படி ஏமாற்றிப்பிழைப்பாய்? ஒருநாள். சுற்றுவட்டாரம் முழுதும் நீ அண்டப்புளுகன் என்று தெரிந்துவிடும். அதனால் உனக்கு நிரந்தர வருமானம் கிடைக்க நான் ஒரு வழி சொல்கிறேன். நீ என் மருமகன் கோபாலனிடம் போ! அவன் உனக்கு வேலை தருவான். உன்னை மாதிரி அழகாகப் பொய் பேசுபவன் இந்த வட்டாரத்திலேயே யாருமில்லை. இந்த அபாரத் திறமை வீணாகலாமா? நீ உடனே போ என்று கோபாலனிடம் அனுப்பினார்.

கோபாலன் நகரத்தில் ஒரு பெரிய வழக்கறிஞன். அவனுக்கு நிறையப் பணக்கார வாடிக்கையாளர்கள் இருந்தனர். அவர்கள் செய்யும் தில்லு முல்லுகளிலிருந்து தப்பிக்க நீதிமன்றில் தடுமாறாமல் அழகாகப் பொய்சாட்சி சொல்ல ஆட்கள் தேவைப்பட்டனர். தன் மாமனார் மூலம் வீராவின் பொய் பேசும் திறமையை அறிந்த கோபாலன் அதற்காகவே அவனை வரவழைத்து தன்னிடம் வேலைக்கு அமர்த்திக் கொள்ள விரும்பினான். அதன் படியே வீராவும் கோபாலனிடம் வேலைக்கு அமர்ந்தான்.


தனது பணக்கார வாடிக்கையாளர்களை சட்டத்தின் பிடியிலிருந்து தப்பவைக்க வீராவை சாட்சிக்கூண்டில் ஏற்றி அவர்களுக்கு அனுகூலமாக சாட்சி சொல்ல வைத்தான். எத்தனையோ பொய் சாட்சிக்காரர்கள் அரசு சட்டத்தரணியின் கேள்விகளுக்கு பதில் அளிக்கத் தடுமாறுகையில் அபார கற்பனை சக்தி கொண்ட வீரா அழகாகப் பொய்சாட்சி சொல்லி பலருக்கு உதவினான். இவ்வாறு பொய் சொல்வதை முழுநேர வேலையாகக்கொண்டு கைநிறைய சம்பாதித்தான்.

ஒருநாள் தனது கிராமத்துக்குச் சென்று மாலை நகரத்திற்கு திரும்பிய வீரா மாலை மங்கியதால் நகர எல்லையில் இருந்த ஒரு சத்திரத்தில் தங்கினான். அங்கு அவனுடன் சத்திரத்தில் ஒரு வயதான தம்பதி தங்கியிருந்தனர். அவர்களுடைய ஒரேமகன் கோயிலில் சுவாமி நகைகளைத் திருடிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டு மறுநாள் நீதிமன்றில் விசாரணைக்கு ஏற்பாடாகியிருந்தது. அந்த வழக்கு விசாரணையைக் காண்பதற்காகவே அவன் பெற்றோர் நகரத்திற்கு வந்திருந்தனர். உண்மையில் தங்கள் மகன் மிகவும் நல்லவன் என்றும் அவன்மீது தவறாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்றும் கூறிய அவர்கள் அவன் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு அவன் சிறையில் அடைக்கப்பட்டால் தங்களால் வாழமுடியாது என்றும் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் கூறி அழுதனர். அதைக்கேட்டு வீராவின் மனம் இளகிப் போயிற்று.

மறுநாள் வீரா நீதிமன்றிற்குப் போனான். அவன் முதலாளி கோபாலன் அன்றைய வேலையைப் பற்றி விளக்கினார். அவருடைய வாடிக்கையாளர் கனகபுரம் ஜமீன்தார் கோயில் சொத்துக்களைத் திருடுபவர் என்றும் முதல்நாள் இரவு அவரும் அங்குள்ள அம்மன் கோயிலின் பூசாரியும் சேர்ந்து சதித் திட்டமிட்டு அம்மனின் நகைகளைத் திருடும்போது தற்செயலாகக் கோயிலில் இரவு தங்கியிருந்த ஓர் இளைஞன் அதைப்பார்த்து விட உடனே பூசாரியும் ஜமீன்தாரும் அவனைப் பிடித்து நகைகளை அவனே திருடியதாக வழக்குப் போட்டுள்ளனர் என்றும் வீரா அந்த இளைஞன் திருடியதைத் தான் கண்ணால் பார்த்ததாக சாட்சி சொல்ல வேண்டும் என்றும் கூறினான்.

ஜமீன்தாரையும் பூசாரியையும் குற்றம் சாட்டப்பட்ட இளைஞனையும் பார்த்தவுடன் வீராவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஏனெனில் திருட்டு நடந்த அதே நாளில் அதேகோயிலில் வீராவும் மழைக்காக ஒதுங்கியிருந்தான். ஜமீன்தாரும் பூசாரியும் திருடியதை அவனும் தன் கண்ணால் பார்த்தான். குற்றமற்ற அந்த இளைஞனையும் அதே கோயிலில் பார்த்தான். பெரிய இடத்து விவகாரம் நமக்கேன் வம்பு என்று வீரா உடனே அந்த இடத்தை விட்டு நழுவ அந்த வாலிபன் சிக்கிக்கொண்டான் என்று புரிந்தது. நிரபராதியான அந்த இளைஞனின் பெற்றோர்தான் நேற்று தன்னிடம் தன் மகனைப் பற்றிப் புலம்பிக் கண்ணீர் விட்டுக்கதறினர் என்பதை வீரா எளிதாக ஊகித்துக் கொண்டான்.

நீதிமன்றம் ஆரம்பமாகியது. முதலில் கூண்டில் ஏறிய பூசாரி இளைஞன் கோயில் நகைகளைத் திருடியதாகக் குற்றம்சாட்ட விசாரணை நடந்தது. பூசாரி சொன்னதை நிரூபிக்க வீரா சாட்சி சொல்ல



கூண்டுக்கு அழைக்கப்பட்டான். ஏற்கனவே வீரா என்ன சொல்ல வேண்டும் என்று கோபாலன் விளக்கியிருந்தான். அதன்படி அம்மன் கோயிலில் அன்றிரவு அந்த இளைஞன் நகைகளைத் திருடியதைத் தன் கண்ணால் பார்த்ததாக வீரா சாட்சி சொல்ல வேண்டும். அரசு வழக்கறிஞர் வீராவை குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பித்தார். பகவத்கீதையின் மீது கைவைத்து சத்தியப்பிரமாணம் செய்தபின் வீரா சாட்சி சொல்ல ஆரம்பித்தான்.

ஆனால் கோபாலன் சொல்லிக் கொடுத்தபடி பொய் சாட்சி அல்ல! தான் தன் கண்களினால் பார்த்ததைச் சொன்னான். திருடியது பூசாரியும் ஜமீன்தாருமே என்றும் அந்த இளைஞன் குற்றம் அற்றவன் என்றும் சாட்சி சொன்னான். ஜமீன்தாரும் பூசாரியும் அவனைச் சுட்டுவிடுவது போல் பார்க்க கோபாலன் கண்களினால் வீராவை எரித்து பஸ்மம் ஆக்கினார். அந்த இளைஞனின் பெற்றோர் கண்களில் கண்ணீர் வழிய அவனை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டனர்.

சாட்சிக்கூண்டை விட்டு வெளியே வந்த வீராவுக்கு அன்று முதன்முறையாக மனதில் அசாதாரணமாக நிம்மதி தோன்றியது. அன்றுவரை வாழ்வில் பொய்யைத்தவிர எதுவும் பேசாத அவனுக்கு அன்று நீதிமன்றில் தான் கூறிய உண்மை இனந்தெரியாத மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருவதை உணர்ந்தான். நிரபராதி இளைஞனின் நன்றி கலந்த பார்வையும் அவனுடைய பெற்றோரின் ஆனந்தக் கண்ணீரும் தந்த மனநிறைவு அன்று வரை அவனுக்கு ஏற்பட்டதேயில்லை. ஒன்று நிச்சயம். நீதிமன்றில் உண்மை சொன்னதற்காக கோபாலன் தன்னை வேலையை விட்டு நீக்கிவிடுவார். அவனுடைய நிரந்தர வருமானம் பறி போகும்.

ஆனால் அவன் அதைப்பற்றி கவலைப்படவில்லை. பொய் சொல்லிப் பிழைக்கும் ஈனப் பிழைப்புக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு தன்மானத்தோடு பிழைத்து அரை வயிற்றுக்குக் கஞ்சி குடித்தாலே போதும் என்ற உறுதியுடன் வீரா நீதிமன்றுக்கு வெளியே வந்தான். இனி அவன் பொய் பேசமாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத இராசி பலன்

# 16.11.2012-15.12.2012




**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

## இம்மாதம்மகிழ்ச்சிகரமாக இருக்கும் இல்லத்தில் சந்தோஷம் அதிகரிக்கும்

**சுபவிரயங்கள் அதிகரிக்கும் நேரம்!**

**கவர்ச்சியாகப்பேசி காரியங்களை சாதித்துக் கொள்வதில் வல்லமை பெற்ற துலாம் இராசி நேயர்களே!**

நீங்கள் அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள். அதிர்ஷ்டத்தை நம்புபவர்கள். காரியங்களை சாதிப்பதிலும் வல்லவராக விளங்குவீர்கள்.

உங்களுக்கு இந்த கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது ஜென்மச்சனியின் ஆதிக்கம் ஒருபுறம் இருந்தாலும், அஷ்டமத்துக் குருவின் ஆதிக்கம் மறுபுறம் இருக்கிறது. எனவே, எதிர்பாராத விரயங்கள் ஏராளமாக ஏற்படலாம்.

மாதத் தொடக்கத்திலேயே சுக்கிரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து பலம்பெறப்போகிறார். அத்தோடு புதனும் கூடி, புதசுக்ர யோகத்தை உருவாக்கிறார்கள். எனவே, பொருளாதாரத்தில் திடீர் உயர்வு கிடைக்கும். அதே சமயத்தில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் வந்த மறுநிமிடமே இந்த தொகை செலவாகலாம்.

சனிக்கு பரிகாரம் ஒவ்வொரு சனிக்கிழமையும் விநாயகர், அனுமன், சனி ஆகியோரை வழிபாடு செய்வது நல்லது. உங்கள் இராசியை தேடி இந்த மாதம் ராகு வருவதாலும் சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப் போவதாலும், சர்பப் சாந்தியை முறையாகச் செய்தால்தான் குடும்ப ஒற்றுமையும் கூடும்.

**சுக்ர பெயர்ச்சியும் புதனின் பெயர்ச்சியும்**

சுக்கிரன் நவம்பர் 17 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் இராசியிலேயே சஞ்சரிக்கும் பொழுது உடல் ஆரோக்கியம் சீராகும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தங்கம், வெள்ளி தாராளமாக வந்து சேரும்.

டிசெம்பர் 12 இல் விருச்சிகத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். அது சமயம் வீடுகட்டும் முயற்சியில் வெற்றி கிட்டும். விலகிச் சென்ற வர்கள் விரும்பி வந்து சேருவர். இதற்கிடையில் விருச்சிகத்தில் புதனும் வந்து இணைந்து புதசுக்கிர யோகத்தை உருவாக்குகிறார்களள. எனவே, மாமன், மைத்துனர் வழிகளில் மங்கல நிகழ்வுகள் நடைபெறும்.

**நலம் தரும் ராகு கேது பெயர்ச்சி!**

டிசெம்பர் 2 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே இராகு சஞ்சரிக்கப் போகிறார். சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. குடும்ப உறுப்பினர்களிடம் விட்டுக் கொடுத்து செல்வதன்மூலம் விருப்பங்கள் நிறைவேறும். கோபத்தை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள்.

சப்தம கேதுவின் ஆதிக்கத்தால் பயணங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சிகளை தள்ளி வைப்பது நல்லது. வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய சில விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடலாம்.

**தனாதிபதி உச்சம் பெறும் நேரம்!**

தனாதிபதி செவ்வாய் டிசெம்பர் 15 ஆம் திகதி மகர இராசியில் உச்சம் பெறப்போகிறார். இது மிகுந்த நன்மை தரும் நேரமாகும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வீர்கள். தொலைதூரத்திலிருந்து வரும் நல்ல தகவல் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும். சகோதரர்கள் சகயமாக நடந்து கொள்வார்கள்.

இந்த மாதம் அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும். இந்த மாதத் தொடக்கம் உங்களுக்கு மகிழ்ச்சி கரமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிகழ்வுகள் நடைபெறும். நூதன பொருட்சேர்க்கை உண்டு. பக்கத்து வீட்டாரின் பகை மாறும். கணவன்- மனைவிக்குள் அன்பு அதிகரிக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஜென்மச் சனியின் ஆதிக்கமும் ஜென்ம இராகுவின் ஆதிக்கமும் திடீர் மாற்றங்களைக் கொடுக்கலாம். ஆரோக்கியத்திலும் அச்சுறுத்தலை உருவாக்கலாம். எனவே, முறையான சர்ப்ப சாந்தியை யோக பலம் பெற்ற நாளில் செய்து கொள்வது நல்லது. மாதக் கடைசியில் வர வேண்டிய பணம் வசூலாகும்.

# சிவல்புரி சிங்காரம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**




## சுபகாரியப்பேச்சுக்கள் நல்ல முடிவிற்குவரும் சகோதரர்களுக்குள் ஒற்றுமை பலப்படும்

**வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்!**

**உதவி செய்வதன் மூலம் பதவிகளை வரவழைத்துக் கொள்ளும் விருச்சிக இராசி நேயர்களே!**

வல்லவர்களுக்கு மத்தியில் நல்லவர்களாக விளங்குவீர்கள். ஆற்றல் மிக்கவர்களையே உங்களுக்குப் பின்னணியாக வைத்துக் கொண்டிருப்பீர்கள்.

உங்களுக்கு இந்த கார்த்திகை மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும் விதத்திலேயே அமைந்திருக்கின்றன. ஏழரைச்சனியின் ஆதிக்கத்தால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வீர்கள். குருவின் பார்வை பலத்தால் குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள்.

மாதத் தொடக்கமே உங்கள் இராசியிலேயே தொடங்குவதால் மகத்தான பலன்களை தரும் என்றே கருதலாம். சூரிய, சந்திர சேர்க்கையோடு இருப்பதால் அனைத்து வழிகளிலும் ஆதாயம். அரசியல் செல்வாக்கு புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் சூழ்நிலை உருவாகும்.

**சுக்கிர பெயர்ச்சியும், புதனின் பெயர்ச்சியும்**

நவம்பர் 17 ஆம் திகதி துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். டிசெம்பர் 12 ஆம் திகதியிலேயே சுக்கிரன் உங்கள் இராசிலேயே அடியெடுத்து வைக்கப்போகிறார். இதன்விளைவாக சேமிப்புகள் அதிகரிக்கும். வருமானம் இருமடங்கு வளர்ச்சி மேலோங்கும். தொகை வந்து கொண்டேயிருக்கும்.

**நலம் தரும் ராகு- கேது பெயர்ச்சி!**

டிசெம்பர் 2 ஆம் திகதி துலாத்தில் இராகுவும், மேடத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதன் விளைவாக மிகுந்த நற்பலன்கள் உங்களுக்கு வந்து சேரும்.

மறைந்த இராகுவால் நிறைந்த தன லாபம் வந்து சேரும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். நீண்டதூர பயணங்களை ஏற்றுக் கொள்ள விரும்புபவர்கள் சுயஜாதகத்தை ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்வதே நல்லது.

சப்தம கேது 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போவதால், குடும்ப ஒற்றுமை பலப்படும். கூட இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

குறிப்பாக உங்கள் இராசியை விட்டு விலகும் இராகுவால், மிகுந்த யோகமும் பொருளாதாரநிலை உயரும் அமைப்பும் உருவாகும். வங்கி சேமிப்பு அதிகரிக்கும் இந்த நேரத்தில் வாங்கல்- கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்காகும். இடமாற்றம், ஊர் மாற்றம், இலாகா மாற்றங்களும் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

இதற்கிடையில் டிசெம்பர் 5 ஆம் திகதி இராசியிலேயே புதனும் சஞ்சரிக்கப் போகிறார். இந்த புதசுக்ர யோகத்தின் விளைவாக தொழில்

**செல்வம் தரும் செவ்வாய் பெயர்ச்சி!**

இராசிநாதன் செவ்வாய் டிசெம்பர் 15 ஆம் திகதி மகர இராசியில் உச்சம் பெறப்போகிறார். இதன்விளைவாக ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். சகோதர ஒற்றுமை பலப்படும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் உண்டு.

இம்மாதம் வள்ளி மணாளப் பெருமானை வழிபட்டால் வளர்ச்சி கூடும்.

இம்மாதம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும் மாதமாகவே அமையும். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். சுபகாரிய பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் பாராட்டும்படியான ஒரு செயலைச் செய்து முடிப்பீர்கள். கணவன்- மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். ஆபரணங்களை வாங்கி சூடி மகிழும் சூழ்நிலை அமையும். இராகு- கேது பெயர்ச்சியாவதன் மூலம் நன்மைகள் அதிகளவில் வந்து சேரப்போவதால், சர்ப்ப சாந்திகளை முறையாக செய்வது நல்லது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தொடர்பான, அமெரிக்க கொள்கையில் மாற்றங்கள் ஏற்படுமா?

அமெரிக்காவில் கடந்தவாரம் நடைபெற்ற தேர்தலின் மூலம் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார் பராக் ஒபாமா. அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி பதவியை அலங்கரிக்கப்போகும் அவருக்கு, உலகெங்கும் இருந்து வாழ்த்துகள் குவிந்துள்ள நிலையில், இலங்கையில் இருந்தும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் வாழ்த்துச் செய்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் ஒபாமாவின் வெற்றியை வாழ்த்தி வரவேற்றுள்ளது. இவை இருவரதும் வாழ்த்துக்களின் அடிப்படையும், எதிர்பார்ப்புகளும் முற்றிலும் எதிர்மறையானவை. காரணம், ஒபாமா நிர்வாகம் இலங்கை தொடர்பாக கொண்டுள்ள அணுகுமுறைகள் தான்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவானபோது- விடுதலைப்புலிகள் சார்பிலும் வாழ்த்து அனுப்பப்பட்டது. ஒபாமாவின் வெற்றிக்காக அப்போது புலம்பெயர் தமிழர்கள் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டும் இருந்தனர். அவர்களின் அந்த முயற்சியும், ஒபாமா ஜனாதிபதியானதும் அதை வரவேற்று விடுதலைப் புலிகளின் தலைமை அனுப்பிய வாழ்த்தும் ஒபாமாவின் காலத்தில் உரிய பலனைக் கொடுத்ததாகக் கூறமுடியாது. ஏனென்றால், அவரது ஆட்சியின் தொடக்க நாட்களில்தான், போரின் இறுதிக்கட்ட அவலங்கள் அரங்கேறின. அதைத் தடுப்பதற்கு- ஆயிரக்கணக்கான மரணங்களைத் தடுப்பதற்கு ஒபாமா நிர்வாகம் போதிய அக்கறை செலுத்தவில்லை என்பது; அல்லது அப்போது போரை நிறுத்துவதற்கு நியாயபூர்வமான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படை. ஒருதலைப்பட்சமான முறையில், போரை முடிவுக்குக் கொண்டு

நன்றி:- இணையம்


வரும் வகையில் அதாவது விடுதலைப்புலிகளுக்கு சாதகமற்ற விதத்திலேயே போரை முடிவுக்குக் கொண்டு வரவே ஒபாமா நிர்வாகமும் இணைத் தலைமை நாடுகளுடன் இணைந்து முயன்றிருந்தது. இதனை எரிக் சொல்ஹெய்மின் அண்மைய பேட்டிகளில் இருந்தே உணர்ந்து கொள்ளலாம். இருந்தபோதிலும் போரின் முடிவுக்குப்பின்னர், ஒபாமா நிர்வாகத்தின் அணுகுமுறைகள் இலங்கைக்கு கடும் அழுத்தங்களை கொடுக்கும் விதத்தில் அமைந்திருந்தன.

ஒபாமா தனது முதலாவது பதவிக் காலத்தில் இலங்கையைப் பொறுத்தவரை மனித உரிமைகள் விடயத்திலும், அனைத்து மக்களும் சுயமரியாதையுடன், நியாயமாக வாழவேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் மிகத் தெளிவாக இருந்து வந்தார் என்பதில் சந்தேகமில்லை. அதன் காரணமாகவே ஒபாமா நிர்வாகத்தினால் இலங்கை அரசு மீது பல்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. அதன் உச்சக்கட்டமாகவே ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. அத்தோடு அமெரிக்கா நின்றுவிடவில்லை.

போரின் போதான மீறல்களுக்கு சுதந்திரமான- நம்பகமான பொறிமுறைமூலம் பொறுப்புக்கூற வேண்டும்; வடக்கில் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும்; இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை விரைவாக முன்வைக்க வேண்டும்; எல்லா மக்களும் நீதியாகவும் நியாயமாகவும் சமத்துவமாகவும் வாழ்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே ஒபாமா நிர்வாகத்தின் வலியுறுத்தலாக இருந்து வருகிறது.

அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற பூகோளகால மீளாய்வின் போதும் அமெரிக்கா இதையே வலியுறுத்தியது.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில், இலங்கையில் மீண்டும் போர் வெடிக்கக் கூடாது என்ற தெளிவானதொரு பார்வையை- நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. அத்தகையதொரு நிலைக்கான புறக்காரணிகளை களைவதில் அமெரிக்கா- அதாவது ஒபாமா நிர்வாகம் உறுதியைக் கடைப்பிடிக்கிறது. தமிழர்களுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படாதுபோனால் இன்னும் சில ஆண்டுகளில் மீண்டும் ஆயுதப்போர் வெடிக்கும் என்பதே அமெரிக்காவின் கணிப்பாக உள்ளது. இது அமெரிக்காவினது மட்டுமல்ல, பல்வேறு அரசியல், இராணுவ, புலனாய்வு நிபுணர்களும் இதையேதான் கூறுகின்றனர். மிக அண்மையில்கூட ராஜீவ் காந்தி கொலை வழக்கை துப்புத்துலக்கிய சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவரான, இந்தியப் புலனாய்வு அமைப்பின் முன்னாள் அதிகாரி டி.ஆர். கார்த்திகேயனும் இதே கருத்தையே கூறியுள்ளார். அத்தகையதொரு போர் உருவாவதற்கான காரணிகளைக் களை



வதற்காக, அமெரிக்கா இலங்கை மீது அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது. இதனை முற்றிலும் தமிழர்களின் நலன் சார்ந்த அமெரிக்க நடவடிக்கையாக இல்லாவிட்டாலும், சற்று தமிழர்கள் நலனும் உள்ளது என்பதுதான் உண்மை.

இலங்கையில் இன்னொரு குழப்பநிலை உருவாவது, அமெரிக்காவின் வர்த்தக, பாதுகாப்பு நலன்களைப் பாதிக்கும் என்பதால், அதைத்தவிர்க்க முனைகிறது; அவ்வளவுதான். ஒபாமா அரசின் இந்தக் கொள்கை, தமிழர் தரப்புக்கு ஓரளவுக்கேனும் சாதகமாக இருப்பதுதான், கொஞ்சம் ஆறுதலானது. இலங்கை அரசாங்கம், அமெரிக்கத் தலையீடுகள், அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்கு குடியரசுக் கட்சியின் வேட்பாளர் ரோம்னி வெற்றி பெற்றால் நல்லது என்று கருதியிருந்தது.

இலங்கை மட்டுமல்ல, இலங்கையினது நட்பு நாடாக இருக்கும்- அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாகவும் இருக்கும் இஸ்ரேலும்கூட, ரோம்னியின் வெற்றியையே எதிர்பார்த்திருந்தன. இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாஹு, வெளிப்படையாகவே ரோம்னியை ஆதரித்து வந்தார். ஒபாமா வெற்றி பெற்றதும் வேறு வழியி[illegible]ன்றி வாழ்த்து அனுப்பினார் நெதன்யாஹு. [illegible]போலத்தான் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் ஒரு சம்பிரதாய பூர்வமான வாழ்த்தை ஒபாமாவுக்கு அனுப்பினார்.

ஒபாமா இரண்டாவது முறையாகவும் வெற்றி பெற்றுள்ள நிலையில், இலங்கை தொடர்பான அமெரிக்க கொள்கையில் மாற்றங்கள் ஏற்படுமா என்ற கேள்விக்குறிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஒபாமா நிர்வாகம், இலங்கை விடயத்தில் மிகத் தீவிரமான கடும்போக்கைக் கொண்டிருக்காது போனாலும், மென்போக்குடன் நடந்து கொண்டிருக்கவில்லை. வழக்கமாக, முதலாவது பதவிக் காலத்தில் தடுமாறும் ஜனாதிபதிகளைப்போலவே, ஒபாமாவும் சற்று தடுமாறி விட்டார் என்ற விமர்சனங்கள் உள்ளன. அது இலங்கை விவகாரத்தைப் பற்றிதாக இல்லாமல்- பொதுப்படையான கருத்தாக உள்ளது.

இலங்கை விவகாரத்திலும் அவரது நிலை அப்படித்தான்.

இரண்டாவது பதவிக்காலத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண ஒபாமா உறுதியான போக்கை கடைப்பிடிப்பார் என்ற பரவலான நம்பிக்கை, இலங்கைக்கு அச்சத்தைக் கொடுக்கக் கூடியது. மென்போக்கு அமெரிக்க இராஜதந்திரமே பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு கடும் உளைச்சலை ஏற்படுத்தியிருந்தது. எனவே, இரண்டாவது பதவிக் காலத்து உறுதியான நகர்வுகள் இலங்கைக்கு சவாலானதான் இருக்கலாம் என்ற கருத்து உள்ளது. இது சரியான கணிப்பா என்பதை போகப் போகத்தான் உறுதி செய்ய முடியும்.

ஆனால் ஒன்று, திடீரென அமெரிக்காவினால் இலங்கை விடயத்தில் ஒட்டிப்போக முடியாது.

கடந்தகால அணுகுமுறைகளைப் புறக்கணித்து அமெரிக்கா, கொழும்புடன் ஒட்டி உறவாடும் என்று நம்புவதற்கில்லை.

அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் இலங்கை தொடர்பான வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் இருக்காது என்று தேர்தலுக்கு முன்னரே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியங்களுக்கான உதவிச் செயலர் றொபேட் ஓ பிளேக் கூறியிருந்தார். எனவே, ஒபாமாவின் வெற்றி இலங்கை அரசுக்கு ஒரு நல்ல செய்தியாக இருப்பதற்கு வாய்பில்லை.

இதனை அரசாங்கத்தினால் வெளிப்படையாகக் கூற முடியாது. அடுத்ததாக ஒபாமா நியமிக்கவுள்ள வெளிவிவகாரத்துறை அதிகாரிகள் யார் என்பதை இலங்கை பரபரப்புடன் எதிர்பார்க்க வேண்டியுள்ளது. காரணம், ஹிலாரி கிளின்ரன், றொபேட் ஓ பிளேக், சமந்தா பவர் போன்றவர்கள் மீண்டும், இலங்கை விவகாரத்தைக் கையாளும் நிலை வருவதை அரசாங்கம் விரும்பாது. ஏனென்றால் அவர்கள் கடந்த காலங்களில் கொழும்புமீது கண்டிப்பைக் காட்டியவர்கள். ஒபாமாவின் வெற்றி முடிந்துபோன காரியமாகிவிட்டது. அவரது வெளிவிவகாரத்துறை அதிகாரிகள் முன்பைப் போலவே இறுக்கத்தைக் காண்பிப்பவர்களாக இருப்பார்களா என்பதே இலங்கை அரசின் இப்போதைய கவலைக்குரிய விடயமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் கார் பந்தயத்திற்கும் சலுகைகள் வேண்டும்-மேர்வின்

எனது மகனுக்கும் லம்போகினி கார் வங்கிக் கொடுக்கவுள்ளேன். எனது மகன் லம்போகினி காரை விரும்பினால் அதனை நான் வாங்கிக் கொடுப்பேன் என மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுக்களுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஏன் மோட்டார்கார் பந்தயக்காரர்களுக்கு சலுகைகளை வழங்க முடியாது.

பந்தயக்கார்கள் மட்டுமன்றி பந்தய விமானங்களை செலுத்தக் கூடியவர்கள் இருந்தால் அவர்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டம் பல்வேறு நலன்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

நானும் பந்தயக்கார் செலுத்துவேன். என்னுடன் எவரேனும் மோதவிரும்பினால் மோதலாம் என அமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்க சவால் விடுத்துள்ளார். (அ-2)

# பாடப்புத்தகம் அச்சிடுவதற்காக 2400 மில்லியன் ரூபா செலவு

## கல்வி வெளியீட்டு திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டின் பாடப் புத்தகங்களுக்காக அரசாங்கம் 2 ஆயிரத்து 400 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளதாக கல்வி வெளியீட்டுத்திணைக்கள ஆணையாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண தெரிவித்தார்.

37 மில்லியன் பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. பாடப் புத்தகங்களை வழங்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் 6 ஆம் திகதி கண்டி தர்மராஜ கல்லூரியில் நடைபெறும்.

இம்முறை 404 புதிய புத்தகங்கள் அச்சிடப்பட்டன.

427 வகையான புத்தகங்கள் 2013 இல் விநியோகிக்கப்படும். 23 வகையான நூல்கள் ஏற்கனவே அச்சாகியுள்ளன என்றும் ஆணையாளர் தெரிவித்தார். 41 இலட்ச மாணவர்களுக்காக 370 இலட்ச புத்தகங்களை விநியோகிக்க வேண்டியுள்ளது.

சகல மாணவர்களுக்கும் புதிய புத்தகம் ஒன்றை வழங்குவது அரசின் கொள்கை என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (அ-2)

# மஹிந்தவின் சட்டவுரைஞர்களாக 22 சட்டத்தரணிகள் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சட்டவுரைஞர்களாக தமிழர் ஒருவர் உட்பட 22 சட்டத்தரணிகள் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேல் முறையீட்டு நீதிபதிகள், மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன் னிலையில் இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் பொறுப்0பேற்றுக் கொண்டனர்.

சட்டத்தரணி முருகேசு சிற்றம்பலம் உட்பட 22 வழக்குரைஞர்களே ஜனாதிபதி சட்டவுரைஞர்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதியின் சட்டவுரைஞர்கள் ஒரு தடவையில் கூடுதலாக நியமிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். (அ-2)

# வைப்பிலிடப்பட்ட பணம் காணாமல் போனது

## பாதிக்கப்பட்ட பெண் முறையீடு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அரச வங்கியொன்றில் வைப்பிலிட்ட தனது பணத்தினை அவ்வங்கி அபகரித்து விட்டதாக பெண்ணொருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு நீதவான் நீதிமன்றில் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஷிராணி அனோமா துலாவ என்ற பெண்ணே குறித்த அரச வங்கியில் 17 ஆயிரத்து 724 அமெரிக்க டொலர்களை கடந்த 1998 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25 ஆம் திகதி வதிவோர் வெளிநாட்டு கணக்கில் வைப்பிலிட்டுள்ளார்.

தான் வைப்பிலிட்ட அந்தப் பணத்தினை மீளப் பெறச் சென்ற போது அந்தப் பணம் மீளப்பெறப்பட்டு விட்டதாக வங்கி அதிகாரிகள் தெரிவித்ததாக குறித்த பெண் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததாகவும் குறித்த பெண்ணின் முறைப்பாட்டை அரச வங்கி மறுத்துள்ளதுடன் அப்பெண் வங்கியிலிருந்து பெற்ற கடனை திருப்பி செலுத்த முடியாதபடியால்தான் அவரது வங்கிக் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.11 17

★ *1292*-ஜோன் பலியல் ஸ்கொட்லாந்தின் அரசன் ஆனான்.

★ *1511*-ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து ஆகியன பிரான்சுக்கு எதிராக அணி திரண்டன.

★ *1558*-இங்கிலாந்தின் முதலாம் மேரி இறக்க அவரது ஒன்றுவிட்ட சகோதரி முதலாம் எலிசபெத் அரசியானார்.

★ *1796*-பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களை இத்தாலியில் ஆர்க்கோல் என்ற இடத்தில் தோற்கடித்தன.

★ *1820*-கப்டன் நத்தானியல் பால்மர் அண்டார்ட்டிக்காவை அடைந்த முதலாவது அமெரிக்கர் ஆனார். பால்மர் குடாநாட்டுக்கு இவரது நினைவாகப் பெயர் சூட்டப்பட்டது.

★ *1831*-எக்குவாடோர் மற்றும் வெனிசுவேலா ஆகியன கொலம்பியாவில் இருந்து பிரிந்தன.

★ *1869*-எகிப்தில் சுயஸ் கால்வாய் திறக்கப் பட்டது.

★ *1873*-பெஸ்ட் பூடா மற்றும் ஓபுடா ஆகிய நகரங்கள் இணைக்கப்பட்ட புடாபெஸ்ட் நகரம் ஹங்கேரியின் தலைநகராக்கப்பட்டது.

★ *1878*-இத்தாலியின் முதலாம் உம்பேர்ட்டோ மீதான முதலாவது கொலை முயற்சி இடம்பெற்றது.

★ *1903*-ரஷ்யாவின் சமூக ஜனநாயக தொழிற் கட்சி போல்ஷெவிக் (பெரும்பான்மை), மேன்ஷெவிக் (சிறுபான்மை) என இரண்டாகப் பிளவுண்டன.

★ *1918*-யாழ்ப்பாணத்தில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. நூற்றுக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். நிவாரண நிதியம் அமைக்கப்பட்டது.

★ *1922*-முன்னாள் ஒட்டோமான் பேரரசின் சுல்தான் ஆறாம் மெஹ்மெட் இத்தாலிக்கு நாடு கடத்தப்பட்டான்.

★ *1933*-ஐக்கிய அமெரிக்கா சோவியத் ஒன்றியத்தை அங்கீகரித்தது.

★ *1939*-செக் நாட்டில் நாசி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடுத்து 9 மாணவர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் வதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

★ *1950*-14 ஆவது தலாய்லாமா டென்சின் கியாட்சோ தனது 15 ஆவது வயதில் திபெத்தின் அரசுத் தலைவரானார்.

★ *1968*-அலெக்சாண்ட்ரொஸ் பனகோலிஸ் என்பவருக்கு கிரேக்க சர்வாதிகாரி ஜோர்ஜ் பப்படொ பவுலொசைக் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

★ *1970*-வியட்நாம் போர்: மைலாய படுகொலைகள் தொடர்பாக அமெரிக்காவின் லெப்டினண்ட் வில்லியம் கலி விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

★ *1970*-சோவியத்தின் லூனாக்கொட் 1 சந்திரனில் தரையிறங்கியது. தொலைவில் இருந்து இயக்கக் கூடிய ரோபோ ஒன்று வேறோர் உலகத்துக்கு அனுப்பப்பட்டது இதுவே முதற் தடவை ஆகும்.

★ *1970*-டக்ளஸ் ஏங்கெல்பேர்ட் முதலாவது கணனி Mouse க்கான காப்புரிமம் பெற்றார்.

★ *1989*-பனிப்போர்: செக்கோசில வாக்கியாவில் இடம்பெற்ற மாணவர் போராட்டம் கலகம் அடக்கும் காவல்துறையினரால் நசுக்கப்பட்டது. ஆனாலும் இந்நிகழ்வு பின்னர் டிசெம்பர் 29 இல் கம்யூனிச அரசைக் கவிழ்க்க ஆரம்பமாக அமைந்தது.

★ *2003*-ஆர்னோல்ட் ஸ்வார்செனேகர் கலிபோர்னியாவின் ஆளுநரானார்.

### பிறப்புக்கள்

★ *1904*-இசாமு நொகுச்சி, சிற்பக் கலைஞரும் கட்டடக் கலைஞரும் (இ.1988)

★ *1909*-சி.இலக்குவனார், தமிழறிஞர் (இ.1973)

★ *1920*-ஜெமினி கணேசன், தமிழத் திரைப்பட நடிகர் (இ.2005)

★ *1927*-கமில் சுவெலபில் செக், நாட்டுத் தமிழறிஞர் (இ.2009)

### இறப்பு

★ *1558*-இங்கிலாந்தின் அரசி முதலாம் மேரி (பி.1516)

### சிறப்பு நாள்

அன்னத்துலக மாணவர் தினம்

### ஜெமினி கணேசன்



ஜெமினி கணேசன் தமிழ்த் திரையுலகில் புகழ் வாய்ந்த நடிகர்களுள் ஒருவராவார். காதல் மன்னன் என்று அழைக்கப்படும் இவர் தமிழ் மற்றும் ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் 200 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார்.

**வாழ்க்கைக் குறிப்பு**

தமிழகத்தின் புதுக்கோட்டையில் 1920 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிறந்தார். அவரது சினிமா சரித்திரம் மிஸ்மாலினி (1947) மூலமாக ஆரம்பமாகியது. பெண் கணவனே கண்கண்ட தெய்வம் மற்றும் மிஸ்ஸியம்மா போன்ற படங்கள் அவருக்கு நட்சத்திர அந்தஸ்தை அளித்தன. அவருக்கு ஏற்கனவே பத்மஸ்ரீ, நடிப்புச் செல்வம் மற்றும் நடிகர் மன்னன் போன்ற விருதுகளும் பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவருடைய உருவம் தாங்கிய தபால் தலையும் வெளியிடப்பட்டது. இவர் நடிகையர் திலகம் என்று புகழ் பெற்ற சாவித்திரியை திருமணம் செய்து கொண்டார். நான் அவனில்லை திரைப்படத்தினை ஜெமினி கணேசனே தயாரித்து, பல வேடங்களில் நடித்திருந்தார். இந்தப் படத்திற்காக அவர் ஃபிலிம்ஃபேர் விருதினையும் பெற்றார்.

**ஜெமினி கணேசன் நினைவாக வெளியிடப் பெற்ற அஞ்சல் தலை வெளியீடு**

ஜெமினி கணேசனின் தபால் தலையினை தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் தயாநிதிமாறன் சென்னையில் நடைபெற்ற விழாவில் வெளியிட்டார். ஐந்து ரூபாய் நாணயப் பிரிப்புக்களில் வெளியான இந்தத் தபால் தலையினை ஜெமினி கணேசனின் புதல்விகள் கமலா செல்வராஜ், ரேவதி சுவாமிநாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

ஆரம்பகாலப் படங்களில் ஜெமினி கணேசனின் பெயர் ஆர். கணேஷ் என்றே இடம்பெற்றது. பராசக்தி படம் மூலமாக தமிழ்த்திரையுலகில் ஒரு புயலாக உருவெடுத்த சிவாஜி கணேசனும் அப்போது கணேசன் என்றே பெயர் கொண்டிருந்தமையால் மாறுபடுத்துவதற்காக இவர் தனது பெயருடன் தனது தாய் நிறுவனத்தின் பெயரை இணைத்து ஜெமினி கணேசன் ஆனார்.

**இறப்பு**

சிறு நீரகக் கோளாறு உள்ளிட்ட நோய்களினால் அவுதியுற்ற ஜெமினி கணேசன் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி இந்திய நேரப்படி பகல் 1.30 மணிக்கு இயற்கை எய்தினார். இவரது பூதவுடல் அரச மரியாதைகளுடன் தகனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வரவு செலவுத்திட்டம் 2013 ஒரே பார்வையில்

07

16. விவசாயத்தில் தன்னிறைவு

16.1. கௌரவ சபாநாயகர் அவர்களே! உணவு உற்பத்தியில் துரித விரிவாக்கமானது தேசத்தின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அத்தியாவசியமானதாகும். தற்பொழுது இடம்பெற்றுவரும் நீர்ப்பாசன முறைமைகளின் புனரமைப்பு மற்றும் புதிய நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைமைகளின் நிர்மாணம் என்பன நீர்ப்பாசனத்தின் கீழ் உலர் வலயத்தில் ஏறக்குறைய 125,000 ஹெக்டேயர் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு முடியுமாக இருக்கும்.

போதிய இருப்புக்களை பேணுவதற்கு நெல் மற்றும் தானியங்களுக்கான களஞ்சிய வசதிகளை விரிவாக்குவதனை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் ஓயா மடுவவில் 70, 000 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட களஞ்சியசாலையொன்றினை தாபித்துள்ளதுடன் அத்தகைய களஞ்சிய சாலைகள் ஏனைய பிரதான விவசாய மாவட்டங்களிலும் நிர்மாணிக்கப்படும், நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் கூட்டுறவு சங்கங்களின் களஞ்சிய வசதிகளை புனரமைப்பு செய்யும் வகையில் ரூபா 500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும். திவிநெகும நிகழ்ச்சித்திட்டமானது சிறிய விவசாயிகளுக்கு அவர்களது அறுவடைகளை நீண்டகாலத்துக்கு பாதுகாப்பதற்காக சொந்த வீட்டுக் கொள்ளைப்புற களஞ்சிய வசதிகளை ஊக்குவிக்கும்.

16.2. வரவு செலவுத்திட்ட மதியுரை கூட்டங்களின் போது என்னை சந்தித்த விவசாயிகளின் பிரதிநிதிகள், சந்தைகளின் தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் கிடைப்பனவினை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொண்டனர்.

இப்பின்னணியில் விதை மற்றும் நடுகைப்பொருட்களை கிடைத்தனவினை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொண்டனர் இப்பின்னணியில் விதை மற்றும் நடுகைப் பொருட்களை சிறிய விவசாயிகளின் பண்ணைகளுக்கு விதை சான்றுப்படுத்தல் சேவை மூலம் உறுதிப்படுத்தப்பட்டு வழங்குவதற்கு ஊக்கமளிக்கப்படும் நிலையான உயர் விளைச்சலை தரக்கூடிய உள்நாட்டு விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள் தொடர்பில் அரசாங்க ஆராய்ச்சி நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக தனியார் துறையினால் செலவிடப்படும் செலவீ னங்களுக்காக மூன்று மடங்கு கழிப்பனவு வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். வரவு செலவு திட்ட மதியுரை கூட்டங்களின் சந்தித்த விவசாய பிரதிநிதிகள் 8 வருடங்களுக்கு நெற்செய்கைக்கான உரத்தினை 50 கிலோகிராம் பொதி ஒன்று ரூபா 350 இற்கு கிடைக்க செய்யுமாறு வேண்டிக் கொண்டனர்.

மேலும் அவர்கள் அவர்களது உற்பத்திகளுக்கான நிலையான சந்தை சூழல் ஒன்றினை உறுதிப்படுத்துமாறும் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டனர். எனவே அடுத்த பெரும் போகத்திலிருந்து தற்பொழுது காணப்படும் நெல் உத்தரவாத விலையான கிலோகிராம் ஒன்றிற்கு ரூபா 28-30 யினை ரூபா32-35 ஆக அதிகரிப்பதற்கு தற்பொழுது நான் முன்மொழிகின்றேன் அத்துடன் சேதன பசளை பயன்படுத்தும் நெற்செய்கைக்காக கிலோகிராம் ஒன்றிற்கு 40 ரூபா உத்தரவாத விலையினையும் நான் முன் மொழிகின் றேன் .

17: உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய ஊக்குவிப்பு

17:1 கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது அரசாங்கத்தின் கீழ் ஒன்று சேர்க்கப்பட்ட விவசாயத்தில் காணப்படும் புதிய அக்கறை ஊக்குவிக்கதக்கதாக காணப்படுகின்றது. 2015 ஆண்டளவில் சிறிய வெங்காயம், சோளம், பாசிப்பயறு, உழுந்து, கௌபி, சோயா, அவரை, நிலக்கடலை, இஞ்சி மற்றும் குரக்கன் என்பவற்றின் இறக்குமதி மட்டத்தினை பூச்சியமாக குறைப்பதே எமது இலக்காகும் பெரிய வெங்காயம் செத்தல் மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு என்பவற்றில் 50 சதவீதமான தன்னிறைவினை அடைந்து கொள்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இந்த நுகர்வு பொருட்களின் உற்பத்தியினை உள்நாட்டில் ஊக்குவிப்பதற்காக இறக்குமதிகளின் போது அதிகூடிய வரிகள் மற்றும் தரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது கடுமையாக அமுல்படுத்தப்படும்.


1000 இளம் வர்த்தக விவசாயிகளை இலக்காக கொண்டு விதை நாற்றுப் பொருட்களை மற்றும் பச்சை வீட்டுத் தொழில் நுட்பம் என்பவற்றை வழங்குவதன் மூலம் அவர்களை பழங்கள் மற்றும் காய்கறிகள் மற்றும் உபபயிர்களின் செய்கையில் ஈடுபடுவதற்கு மாதிரி பச்சை வீட்டு பண்ணை உருவாக்குவதற்கான விசேட கருத்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கு நான் முன் மொழிகின்றேன்.கைவிடப்பட்ட நெற்காணி களை நிரப்புவதற்கு அனுமதிக்காமை என்ற அரசாங்கத்தின் தீர்மானமானது கடுமையாக அமுல் படுத்தப்படும். 2013 ஜுன் 30 ஆம் திகதிக்கு முன்னர் அத்தகைய காணிகளை சொந்தக்காரர்கள் உரிமைகோரி அவற்றினை உற்பத்தி திறன் மிக்க விவசாய பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தாத போது அக்காணிகளை பழங்கள் மரக்கறிகள் மற்றும் பூச்செடிகளை நடுகை செய்ய விரும்புகின்றவர்களுக்கு அரசாங்கத்துடன் குறுகிய கால குத்தகை ஏற்பாடுகளை செய்வதன் மூலம் ஓதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

18. சந்தை வலையமைப்பு

18.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு தாங்கிக் கொள்ள முடியுமான விலைகளில் அத்தியாவசிய உணவுப்பொருட்களின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனவே ஒவ்வொரு நகரத்திலும் வாரச் சந்தைகளை தாபித்து நுகர்வோருக்கும் வழங்குநர்களுக்கும் குறைந்த செலவு முறைமையில் வசதியளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இந்த சந்தைகள் சிறிய உற்பத்தியாளர்களுக்கு அவர்களது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை கொண்டிருக்கும். பாரியளவிலான சந்தை கேள்விகளை ஈடுசெய்வதற்கு நடைபாதைகள் மற்றும் நடமாடும் வாகனங்களைப் பயன்படுத்தி சுயதொழில் வியாபாரங்களில் ஈடுபட்டிருக்கும் சிறிய வர்த்தக சமூகங்களின் வசதிகளை விரிவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான சந்தை வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு அடுத்த மூன்று வருடங்களின் போது 1, 000 விற்பனை கூடங்களைக் கொண்ட லக் சதொச சில்லறை வலையமைப்பினை விரிவாக்குவதற்காக ரூபா 500 மில்லியனை மூலதனப் பங்களிப்பாக செலுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

லக் சதொச நிலையமானது உணவு மற்றும் மரக்கறிகளின் உள்நாட்டு வழங்குநர்களுடன் கொள்வனவு உடன்படிக்கைகளை செய்து கொள்ளும். அத்தியாவசிய மருந்து பொருட்களை தாங்கிக்கொள்ள முடியுமான



விலைகளில் வழங்குவதற்கு ஒவ்வொரு லக் சதொச சில்லறை கடைகளிலும் ஒசு-சல விற்பனை நிலையத்தின் கிளையொன்று உருவாக்கப்படும். கோப்சிட்டி சந்தை வலையமைப்பினை விரிவுபடுத்துவதற்காக கூட்டுறவு முறைமை யானது ஊக்குவிக்கப்படும். அதேபோன்று சந்தை ஏற்பாடுகள், மீன் உற்பத்திகளை தாங்கி கொள்ள முடியுமான விலைகளில் வழங்குவதற்கு மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினால் ஊக்குவிக்கப் படும்.

19. சீனி பெருந்தோட்டக் கைத்தொழில்

19.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, இலங்கை 80 களின் ஆரம்பத்திலிருந்து சிறந்ததொரு சீனிக் கைத்தொழில் துறையினைக் கொண்டிருக்கின்றது. அக்காலத்தில் இக் கைத்தொழில் நாட்டுக்கு தேவையானவற்றில் 30 சதவீதத்தினை உற்பத்தி செய்தது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் போது சீனிக் கைத்தொழில் தனியார் மயப்படுத்தலானது இக்கைத்தொழிலினை விரிவாக்கத்திற்கு எவ்வகையிலும் பங்களிப்புச் செய்திருக்கவில்லை. பல்வேறு பிரதேசங்களில் கரும்பு செய்கையில் ஈடுபட் டிருந்த விவசாயிகள் அவர்களது வாழ் வாதாரங்களை இழந்தனர். சீனி உற்பத்தி யானது உள்நாட்டுத் தேவையில் 6 சதவீ தத்தினை விட குறைவான நிலைக்கு வீழ்ச் சியடைந்தது.

இக்கைத்தொழிலின் தனியார் உரிமையாளர்கள் இதனை மதுபான உற்பத் திக்கான மூலப் பொருள் தயாரிப்புக்காக மாத்திரம் பயன்படுத்தினர். இப்பின்னணியில் தேசிய நலனை கருத்திற்கொண்ட அத்தகைய செயலாற்றுகை குறைந்த ஆத ணங்கள் அனைத்தையும் சீர்திருத்துவதற்கு அரசாங்கம் தலையிட்டது. அரசாங்கம் பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளை புத்தாக்கம் செய்வ தற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பல மாவட்டங்களில் சிறு பற்றுநில விவசாயிகள் செய்கை பண்ணக்கூடிய ஏறக் குறைய 130, 000 ஹெக்டேயர்களை அரசாங்கம் இனங் கண்டுள்ளது.

19.2 இலங்கை சீனி இறக்குமதிக்காக வருடந்தோறும் 450 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை செலவிடுகின்றது. இக்கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வது பாரியளவிலான வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சலினை சேமிப்பதற்கு உதவியாக இருக்கும். மேலும் எத்தனோல் மற்றும் உயிர் சுவட்டு டீசல் அதேபோன்று, பல்வேறுபட்ட ஏனைய உப உற்பத்திகளும் சீனியிலிருந்து தயாரிப்பதற்கு முடியும். செய்கை பண்ணப்பட்ட ஒரு ஹெக்டேயரிலிருந்து சராசரி வருமானம் மாதமொன்றுக்கு ஏறக்குறைய ரூபா 30, 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

சீனிக்கான உள்நாட்டு துணை உற்பத்திகளான சர்க்கரை, பாணி மற்றும் ஏனைய உற்பத்திகளை ஊக்குவிக்கும் வகையில் கித்துள் மரங்களைப் போன்று தென்னை மரங்களிலும் பதனீர் இறக்குவதற்கான அனுமதிகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். உள்நாட்டு சர்க்கரை, பாணி மற்றும் கரும்பு செய்கையாளர்களுக்கான பண்ணை கொள்வனவு விலைகளை உறுதிப்படுத்தல் மற்றும் உள்நாட்டு சீனி உற்பத்தி, பிறநாட்டு உற்பத்திகளை நுகர்வோருக்கு மத்தியில் பிரபல்யப்படுத்தும் வகையில் சீனி இறக்குமதி மீதான வரிகளை தொடர்ந்தும் பேணுவதற்கு முன்மொழிகின்றேன்.

20. பாற்பொருள், கால்நடைவளக் கைத்தொழில்.

20.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, பாற்பொருள் மற்றும் கால்நடை வளக் கைத்தொழிலானது எமது நாட்டில் மிக துரிதமாக விரிவுபடுத்தமுடியுமான பொருளாதார செயற்பாடொன்றாகும். மொனராகலையில் ஒவ்வொன்றும் நாளொன்றுக்கு 10.5 லீற்றர் பாலைக் கொடுக்கக்கூடிய ஏழு பசுக்களை வைத்திருக்கும் ஒரு பெண் தொழில்முயற்சியாளர் தினந்தோறும் ரூபா 3 ஆயிரத்து 675 இனை வருமானமாகச் சம்பாதிக்கின்றார் என்ற கதையை கேள்வியுற்றபொழுது எமது நாட்டிலுள்ள இக் கைத்தொழிலின் முழுமையான பயன்பாட்டினைப் பெறாது தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் எவ்வாறு வீணடித்துள்ளன என்பதை நான் உணர்ந்துகொண்டேன். மறைந்த திரு. எஸ். தொண்டமான் அவர்கள் இக்கைத்தொழிலுக்கு பொறுப்பாக இருந்த பொழுது இக்கைத்தொழிலின் அபிவிருத்திக்காக குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

ஆனால், அவர் தேவையான ஒத்துழைப்பு எதனையும் பெற்றிருக்கவில்லை. இப்பின்னணியில், இலங்கை பாற்பொருள் உற்பத்தி இறக்குமதி நாடொன்றாகவும் காணப்படுகின்றது. எமது நாட்டில் பாற்பொருள் உற்பத்தியினை ஊக்குவிப்பதானது 350 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் வெளிநாட்டுச் செலவீனத்தினை சேமிக்கச் செய்யும் என்பதுடன் எமது கிராமிய தொழில் முயற்சியாளர்களுக்கான புதிய வருமான மூலங்களாகவும் இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகா நான் செய்ததை மறந்து விட்டார்- டிரான் அலஸ்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் தலைமையில் இயங்கும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு கட்சியிலிருந்து விலகியமை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க மற்றும் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டு மூன்று மாதங்களிலே சரத் பொன்சேகா இவ்வாறு செய்துள்ளமை கவலையளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கட்சி பதவிகளில் இருந்து விலகியபோதும் தொடர்ந்தும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பில் இருந்து செயற்படவுள்ளதாக அர்ஜுன ரணதுங்க தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பில் செயலாளராகவும் அர்ஜுன ரணதுங்க கட்சியின் பிரதித் தலைவராகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



அரசாங்க தாதிய உத்தியோகத்தர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியொன்று கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணியானது சுகாதார அமைச்சு வரை சென்று நடத்தப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை சரஸ்வதி

வடமராட்சி கிழக்கு அம்பனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சரஸ்வதி 16.11.2012 அதிகாலை 2 மணியளவில் காலமாகிவிட்டார்

அன்னார் அமரர் சங்கரப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற தபாலூழியர்) மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி (ஆசிரியர்) மீனாட்சிப்பிள்ளை (ஆசிரியர்) ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற வள்ளியம்மை, பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), அன்னலட்சுமி (டென்மார்க்), அமரர் செல்வரத்தினம் (தபால் ஊழியர்), தர்மகுலசிங்கம் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), பத்மநாதன் (ஓய்வுபெற்ற நூலகர் J.P), பாலசுந்தரம் (கிராம அலுவலர் குடத்தனை வடக்கு, கட்டைக்காடு) ஆகியோரின் சகோதரரும் சிவராணி, சிவனேசன் (ஜேர்மனி), சிவனேந்திரன் (தபால் ஊழியர் குடத்தனை), சிவநாதன் (ஜேர்மனி), கிவகௌரி (பெரும்பாக உத்தியோகத்தர், அம்பன் புலோலி), சிவமாலதி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், வடமராட்சி கிழக்கு), சிவதாஸ் ஆகியோரின் தாயாரும் வேலும் மயிலும், ஸ்ரீறஞ்சனா, அன்புக்கரசி, பாமா, திருப்பதி, கேசவன் ஆகியோரின் மாமியாரும், பாஸ்கரன், சுபாகரன்(மலேசியா), சிவகரன், விபுலன், மிதுலன், குமிதா (பல்கலைக்கழக மாணவி யாழ்ப்பாணம்), சஜந்தன், சயானி (ஜேர்மனி), சுயந்தன் (ஜேர்மனி), சங்கீதன் (ஜேர்மனி), சுலக்சன், நிசாந்தன், றஜீவன், சரண்ஜன், கோபிகா, ஆகியோரின் பேத்தியும் டர்வின், சஸ்வின், திலக்ஷிகா, சஞ்சிகா, தர்மிகன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (18.11.2012) காலை 11 மணியளவில் அம்பன் மணல்திடல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(சி-1542)

# இலங்கையின் சூழல் நோக்கு உலகிற்கே வழிகாட்டுகிறது

## மரநடுகை விழாவில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

நாட்டில் 23 சதவீதமாகக்காணப்படுகின்ற வனவளத்தை 35 சதவீதமாக அதிகரிப்பதற்கு 2013 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனை கஷ்டமான காரியமாக விளங்கினாலும் அந்த இலக்கை நோக்கிப் பயணித்து அதனை வெற்றிகொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று நாம் பிறந்த மண்ணுக்கு ஆற்ற வேண்டிய இரு பொறுப்புகள் கடனாக இருப்பதாக நான் நம்புகின்றேன். அதில் ஒன்றுதான் ஒழுக்கம் மற்றும் நற்பண்புகள் நிறைந்த பிள்ளைகளை உருவாக்குவதாகும். அதற்கு நாமெல்லோரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அடுத்த விடயம் தான் எதிர்காலச்சந்ததியினருக்காக மரக்கன்றொன்றை நடுவதாகும்.

தேசத்திற்கு நிழல் மரநடுகை வேலைத் திட்டத்தில் சேர்ந்து மரக்கன்றொன்றை நாட்டி அதனைப் பாதுகாப்பதானது தாயகத்திற்கு ஆற்றும் பாரிய சேவையாக அதனை நான் பார்க்கின்றேன்.

இந்த மண்ணில் எமது எதிர்காலப் பரம் பரை வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தும் நடவடிக்கையையே நாம் இங்கு மேற்கொள்கின்றோம்.

நாம் சிறுபராயத்தில் இருந்த போது சூரிய ஒளியாலும் தாய்ப்பால் மூலமும் தான் உயிரினங்கள் சக்திமிக்கதாக வளர்வதாகக் கேள்விப்பட்டிருக்கின்றோம். என்றாலும் இன்று எமது பிள்ளைகள் சூரிய ஒளியில் விளையாடுவது கூட கூடாதென சில சந்தர்ப்பங்களில் முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.

எம்மைவிடவும் வளர்ச்சியடைந்த தெனக் கூறப்படுகின்ற சக்திமிக்க நாடுகள்தான் இதற்கு அதிகம் பொறுப்புக்கூறவேண்டும்.

நாம் பயங்கரவாதத்தை இந்நாட்டிலிருந்து ஒழித்து சுற்றாடலைப் பாதுகாத்து அதனை மேம்படுத்தி உலகிற்கு வழி காட்டவும் எம்மால் முடிந்துள்ளது.

அதனால் நாம் எமது மரபுரிமைகளின் பக்கம் திரும்பிப் பார்க்க வேண்டும். மரத்திலுள்ள ஒரு இலையைக்கூட பறிப்பது ஒரு புத்தபிக்குவுக்குக்கூட உகந்த செயல் அல்ல என புத்தபெருமான் தன் போதனையிலும் குறிப்பிட்டுள்ளார்.

தன்னை வெட்டிச்சாய்க்கும் மனிதனுக்குக் கூட நிழல் வழங்குவது மரம் என்பதை உலகிற்குத் தெளிவுபடுத்தியுள்ளார்.

அதாவது இலங் கையருக்கு உலகிற்கே வழிகாட்டக் கூடிய சூழல் நோக்கு உள்ளது. நாம் அந்த மரபுரிமையின் பக்கம் திரும்ப வேண்டும். நாம் எமது வரலாற்றில் அதனை நிரூபித்துள்ளோம் என்றார். (அ-2)

# விலைக் கேள்விக்கான கோருதல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம், யாழ்ப்பாணம், வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைக்காகக் கோருகின்றார்.

2. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்புக்கான M7/C8 இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

3. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

4. அக்கறைகொண்டுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல:-021 2240017, தொலைநகல் 021 2240327 மின்னஞ்சல் (vspsch@gmail.com) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல:-021 3202277, தொலைநகல் 021 2240327 மின்னஞ்சல் chunnakamps@gmail.com) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 19.11.2012 முதல் 10.12.2012 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 2000/= ஐ கட்டணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

6. விலைக்கேள்விகள் 11.12.2012 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், பிரதேச சபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் 11.12.2012 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

7. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் தலைமை அலுவலகம்- வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகத்தில் 23.11.2012 அன்று 14.00 மணிக்கு நடைபெறும்.

8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| VSPS/ PIL/ SOLID/ 2012/01 | சுன்னாகம் கொத்தியாலடிப் பகுதியில் திண்மக் கழிவு முகாமைத்துவ திட்ட கட்டடம் நிர்மாணித்தல். | 4.73 | 04 மாதங்கள் | M7/C8 அல்லது அதற்கு மேல் (கட்டடங்கள்) | 72,000.00 | 15.02.2013 வரை |

தியாகராஜா பிரகாஷ்,
தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி/1541)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**பிரச்சினைகள், முரண்பாடுகள் மத்தியில் நாம் எந்த முன்னேற்றத்தையும் எட்டிவிட முடியாது. இன முரண்பாட்டுக் கூறுகள் இந்த நாட்டில் இன்னும் அப்படியேதான் உள்ளன. இந்த முரண்பாடுகளை நீக்காமல் எதிர்காலத்தைப் பற்றி நாம் சரியாகத் திட்டமிட முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மீதான இரண்டாம் நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வரவு செலவுத் திட்டமானது, எமது நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் மிகவும் முன்னேற்றமான ஒன்றாக உள்ளது.

ஒரு நாட்டை நேர்மையாக விசுவாசிப்போர், இந்த வரவு செலவுத் திட்டத்தின் பெறுமதியையும் நோக்கையும் நன்றாக விளங்கிக் கொள்வர்.

ஒரு அரசாங்கத்தின் பொறுப்பு மிக்க பணி என்பது, சகல தரப்பினருடைய தேவைகளையும் நலன்களையும் கவனத்திற் கொள்வதிலே தங்கியுள்ளது.

இந்த வரவு செலவுத் திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னர் கடந்த காலங்களில் ஜனாதிபதி நாட்டின் பல இடங்களுக்கும் நேரில் சென்றிருந்தார்.

வடபகுதியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்களிலும் அவர் அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களை நடத்தியிருந்தார்.

கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டம் ஒன்று கூட நடைபெற்றது.

அனைத்துப் பிரதேச மக்களின் தேவைகளையும் நலன்களையும் உள்ளடக்கி அந்தப் பிரதேசங்களிலுள்ள பிரதிநிதிகளின் தெரிவுகளோடு வரவு செலவுத் திட்டத்தை உருவாக்கும்போது அது அந்த மக்களின் வாழ்வோடு நேரடியாகவே பின்னிப் பிணைந்து கொள்கிறது.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் கல்வி, மருத்துவம், சுற்றுச்சூழல், பொருளாதார மேம்பாடு, கைத்தொழில் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகள், வறுமை ஒழிப்பு, பாதுகாப்பு, அரச நிர்வாக சேவையின் விரிவாக்கம், உட்கட்டுமான விருத்தி, விவசாயம் மற்றும் கடற்றொழில் மேம்பாடு, கிராம அபிவிருத்தி எனப் பலவற்றிலும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் அளவும் கரிசனையும் பாராட்டப்பட வேண்டியது. இந்த நிதியின் பலனை வடபகுதி மக்களும் அனுபவிக்கக் கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இதேவேளை, வரட்சி மற்றும் இயற்கை அனர்த்தப் பாதிப்புகளினால் தாக்கமடைந்த விவசாயிகளுக்கான நிவாரணத்தை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல்லின் விலையை உயர்த்துவதற்கும் இங்கே தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடபிரதேச விவசாயிகள் இதனால் மேலும் நன்மைகளைப் பெற முடியும்.

கால்நடை வளர்ப்போர் தொடக்கம் சகல விதமான உற்பத்தியாளர்களுக்கான ஊக்குவிப்பையும் வாய்ப்புக்களையும் இந்த வரவு செலவுத் திட்டம் உள்ளடக்கியுள்ளது.

திட்டங்களை முழுமைப்படுத்த வேண்டுமானால், அதற்குத் தொடர்ச்சியான ஊக்குவிப்பும் நிதிப்பங்களிப்பும் தேவை. அவற்றுக்குத் தொடர்ச்சியான கண்காணிப்பும் அவசியமாகும்.

அப்படி அமைந்தால்தான் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் முழுமையடையும். அப்பொழுதுதான் அவை மக்களிடம் உரிய முறையில் சென்றடையும்.

வடபகுதி போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்ற வகையில் அந்தப் பிரதேசங்களில் மேலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன.

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் அந்தப் பிரதேசங்களின் தேவைகளுக்கும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிட்ட ஒரு இடத்தை வழங்கியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

எனினும் இன்னும் அங்கே செறிவான உதவிகள் தேவைப்படுகின்றன. விசேட கரிசனை வலுவாக்கப்பட வேண்டியுள்ளது. வீடமைப்புத் திட்டத்துக்கு கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டதில் இன்னும் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் கட்டப்பட வேண்டும். இதேபோல யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஏறக்குறைய 14 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளது.

எமது நாட்டினுடைய மூலவளங்களின் சிதைவுக்கும் அழிவுக்கும் எது காரணமாக இருந்ததோ, எமது மக்களின் வாழ்க்கை பின்தங்கிய நிலைக்கு எது காரணமாக அமைந்ததோ அந்தக் காரணத்தை நாம் முற்றாக நீக்க வேண்டும்.

இதற்கெல்லாம் இனமுரண்பாடுகளின் விளைவே காரணமாக அமைந்திருந்தன.


இனமுரண்பாட்டுக் கூறுகள் இன்னும் அப்படியே உள்ளன. இந்த முரண்பாடுகளை நாம் நீக்காமல் எதிர்காலத்தைப் பற்றி நாம் சரியாகத் திட்டமிட முடியாது.

எத்தகைய அபிவிருத்திப் பணிகளைச் செய்தாலும் அவையெல்லாம் நிரந்தரமானவையாக அமையுமா என்ற கேள்வி மக்களிடம் உள்ளது. இதற்குக் காரணம் மீண்டும் அமைதியற்ற காலம் ஒன்று உருவாகுமா? தீர்க்கப்படாத பிரச்சினைகள் எதிர்காலத்தில் என்னமாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற கேள்விகள் மக்களின் மனதிலே உள்ளன.

பிரச்சினைகளை நாம் தீர்க்காமல் வைத்திருப்போமானால் அதை வைத்துக் கொண்டே வெளிச் சக்திகள் எமது நாட்டில் மூக்கை நுழைக்கும். இதை நாங்கள் இன்று நடைமுறையில் காண்கிறோம்.

நிலையான அமைதித் தீர்வொன்றை எட்டுவதே நாட்டின் அபிவிருத்திக்கும் நல்லிணக்கத்துக்கும் அடிப்படையாக அமையும்.

உள்நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் வாய்ப்புக்களை வழங்கும் தூர நோக்கோடு நல்லதொரு வரவு செலவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



இனப்பிரச்சினையின் தீர்வை முன்னகர்த்துவதற்காக நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அதற்கான ஏற்பாடுகளுக்காக நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைதிக்கான விசேட கவனத்தை அரசாங்கம் கொண்டிருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

அபிவிருத்தி நடவடிக்கையில் நல்லிணக்கச் செயற்பாடும் ஒரு அங்கமே. அது ஒரு முக்கியமான பகுதியே என்பதை அரசாங்கம் தன்னுடைய சிந்தனையில் கொண்டுள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

சிறுபான்மையின மக்களின் நலன்களையும் அவர்களுடைய மனங்களையும் திருப்தியளிக்கும் விதத்தில் பேண முற்படும்போதே நாட்டில் உறுதித்தன்மை உருவாகும்.

தற்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக பேசப்படுகிறது. இதற்குப் பதிலாக 19 ஆவது திருத்தச் சட்டமொன்றை உருவாக்குவதைப் பற்றியும் ஆலோசிக்கப்படுகிறது.

நீண்டகால அரசியற் கோரிக்கையை வைத்துப் போராடிய மக்கள், 13 ஆம் திருத்தச் சட்டத்திலிருந்து படிப்படியாக தங்களுடைய அரசியல் உரிமைகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர்.

மேலும் மக்களின் வாழ்க்கை அடைகின்ற முன்னேற்றம் என்பதே நாட்டின் முன்னேற்றமாகும். மக்களின் மனங்களில் ஏற்படுகின்ற மகிழ்ச்சியும் நம்பிக்கையுமே நாட்டின் கீர்த்தியாகும்.

அந்தக் கீர்த்தியை எட்டுவதே, அதை ஏற்படுத்துவதே ஒரு ஆட்சியின் மகத்துவமாகும்.

அந்த மகத்துவத்தை மகிந்த சிந்தனை உருவாக்க வேண்டும். அதற்கான அடிப்படைகளை அது உருவாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ - 6)




தேசிய வாசிப்பு மாதத்தில் சிறந்த நூலகங்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

தேசிய நூலக ஆவணமாக்கல் வேலைகள் சபையின் விருது வழங்கும் நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொதுநூலகத்திற்கான விருதை செல்வி அனிதா கிருஷ்ணசாமி பெற்றுக் கொண்டதைப் படத்தில் காணலாம்.

# சீட் இறப்பர் காய வைக்க புதிய திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

சிறு இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் நன்மை கருதி ஒரே நாளில் சீட் இறப்பர் காய வைக்கும் புதிய திட்டமொன்றை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது.

நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த பண்டைய முறையில் புகையூட்டி அறைகளில் சீட் இறப்பர் காய வைக்கும்போது ஐந்து தினங்கள் வரையில் காத்திருக்க வேண்டியிருப்பதுடன் பல்வேறு சிரமங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

அத்துடன் இறப்பரின் தரமும் குன்றி விடுகிறது. இவ்வாறான நிலைமையை தவிர்க்கும் பொருட்டே புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் 0112635851 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ - 2)

# பதிலளிக்கக் கூடிய வகையில் கேள்விகளை கேளுங்கள்

## எதிர்க்கட்சிகளை கோருகிறார் தினேஷ்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் எதிர்க்கட்சியினர் சிலர் கேட்கும் நீண்ட கேள்விகளுக்கு விடை தேட பல இலட்ச ரூபாய்கள் செலவாகின்றதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அண்மையில் ஐ.தே.க. எம்.பி. ஜோசப் மைக்கல் பெரேரா எழுப்பிய நீண்ட கேள்விகளுக்கு விடை தேட (தகவல்களை பெற) 40 இலட்சம் ரூபா நிதி செலவிடப்பட்டதாக குறிப்பிட்ட அமைச்சர் கேள்விகளை முறையாகவும் சுருக்கமாகவும் கேட்கப் பழக வேண்டுமென எதிர்க்கட்சியினரைக் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சியினர் பலர் கேள்விகளை மிக நீளமாகக் கேட்டு விட்டு அதற்குப் பதில் தருமாறு கேட்கின்றனர். அதனால் அதற்குப் பதில் வழங்கும் தகவல்களைப் பெற நீண்ட காலம் பெரும் தொகை பணமும் செலவாகிறது.

நாம் எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாராகவுள்ளோம். எனினும் பதிலளிக்கக் கூடிய வகையில் தெளிவாகவும் சுருக்கமாகவும் அந்தக் கேள்விகள் கேட்கப்படுவது முக்கியம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் இது தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி தீர்மானமொன்றுக்கு வரமுடியும் எனக் குறிப்பிட்டார். (அ - 2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியை விரும்புவோர் மக்களுக்காக வாழ்வதில்லை.

-காந்தியடிகள்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இன ஒற்றுமை விடயத்தில் இலங்கை முன்னேற வேண்டும்

## இலங்கையை வலியுறுத்துகிறது கனடா

(கொழும்பு)

மனிதவுரிமைகளை மதித்தல், இன ஒற்றுமைப்பாட்டை ஏற்படுத்துதல் போன்றவற்றில் இலங்கை முன்னேற்றம் காணவேண்டும் என கனடா தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளவையின் உள்ளக அறிக்கையை வரவேற்றுள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர், இந்த அறிக்கை இலங்கை மக்களால் இதுவரை நிரலிடப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் பற்றிய விபரங்களை வெளிக்கொணர்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளதோடு இலங்கை அரசு தொடர்ந்தும் மனிதவுரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களையும் யுத்தத்தில் எஞ்சியிருப்பவர்களையும் பாதுகாக்க எந்தவொரு பொருத்தமான நடவடிக்கையையும் எடுக்கவில்லையென்று இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

கனேடியப் பிரதமரும் தானும் மனிதவுரிமைகளை மதித்தல், இன ஒற்றுமைப்பாட்டை ஏற்படுத்துதல் என்பவற்றில் இலங்கை முன்னேற்றம் காண வேண்டும் என்பதை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கூறிவருவதாகவும் தெரிவித்துள்ளதோடு இலங்கை அரசு மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்த வேண்டுமெனக் கனடா கேட்டுக்கொள்வதாகவும் ஐக்கிய நாடுகளவையின் செயலரின் அறிக்கையை தாங்கள் கவனத்தில் எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

# உ/த பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு மந்த கதியில்

க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வருவதாக இலங்கை ஆசிரியர் சேவைகள் ஒன்றியத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 31-ம் திகதிக்கு முன்னதாக விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை முடிபுறுத்த முடியும் என பெருமை பேசிக் கொள்ளாது, பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பதுளை, குருநாகல், கண்டி, கம்பஹா மற்றும் மாத்தறை ஆகிய விடைத்தாள் திருத்தும் நிலையங்களில் காத்திரமான முறையில் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு போதியளவு கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ந-2)

# மாகாணசபை முறைமை தொடர்பில் ஒருதலைப்பட்ட முடிபு எடுக்கப்படாது

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபை முறைமையில் அரசாங்கம் ஒருதலைப்பட்சமான மாற்றங்களை ஏற்படுத்தாது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஒத்துழைப்புடன் மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வு தொடர்பில் உசிதமான தீர்மானங்கள் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் ஆராய்வதற்கு மட்டும் பாராளுமன்றத் தெரிவுக்குழு உருவாக்கப்படவில்லை எனவும் ஏனைய அதிகாரப்பகிர்வு தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் உதவி பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கான ஆளும் கட்சி உறுப்பினர்கள் பெயரிடப்பட்டு ஓராண்டு காலம் கடந்துள்ள நிலையிலும் எதிர்க் கட்சிகள் தங்களது பிரதிநிதிகளை இன்னமும் நியமிக்கத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசியல் சாசனத்தில் மொத்தமாக 18 தடவைகள் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் இரண்டு தடவைகள் ஆளும் கட்சியும் 16 தடவைகள் ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தத் திருத்தங்களை செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகிந்த சிந்தனை கொள்கைகளுக்கு அமைவான முறையில் அதிகாரப் பகிர்வு குறித்த தீர்மானங்கள் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் நாட்டில் பல்வேறு தரப்பினர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் இவற்றை ஆளும் கட்சியின் நிலைப்பாடாக கருத முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# பான் கீ மூன் செய்த கொடுமை போதும் படைத்தவன் இவ்வுலகை அழிக்க!

இதிகாசங்களான பாரதத்தில் வரும் பாத்திரங்களில் கர்ணன் பரிதாபத்திற்குரியவன்.

பெற்றவள் அநாதையாக நதியில் விட்டுவிட, பரமாத்மா என்ற பார்த்தசாரதிப் பெருமான் மாறுவேடம் தரித்து கர்ணனின் உயர் பறிக்க சதிசெய்தான். இதைவிட மோசம், பாரதக் கதையில் யாருக்கும் நடக்கவில்லை. ஆகையால் கர்ணன் என்ற ஒரு நல்ல பாத்திரம் காப்பாற்றப்பட வேண்டியவர்களால் கொல்லப்பட்டான் என்ற துயரம் எங்கள் துயரங்களை எரிக்கக்கூடியது.

அதேபோல், இராமாயணத்தில் மண்டோதரி பாவப்பட்ட பாத்திரம்.

எந்தத் தவறும் இழைக்காத கற்புடையாள் மண்டோதரி; சூர்ப்பனகையோடு சேஷ்டை விட்ட இராமனாலும், இராமன் மீது காதல் கொண்ட சூர்ப்பனகையாலும், சீதையைக் கடத்திய இராவணனாலும் வேதனைப் பட்டு வெதும்பி வெந்தணலானாள்.

ஒரு நல்ல பாத்திரம் தன்னை அண்டியிருந்த கொடூரக்காரர்களால் துன்பப்பட்ட நெட்டூரம் எங்களையும் வாட்டக்கூடியது. இவை இதிகாசத்தில் நடந்தவை.

இத்தகைய நடப்புகள் சமகால உலகில் உண்டா என்றால், ஆம். ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள் என்று கூறலாம்.

காப்பாற்றப்பட வேண்டியவர்களாலும், நம்பி இருந்த அண்டை நாட்டாலும் அழிக்கப்பட்டவர்கள் ஈழத் தமிழர்கள்.

வன்னிப் போரில் எங்களைக் காப்பாற்றுங்கள் என்று இருகரம் கூப்பிய தமிழ் மக்களை சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தள்ளிவிழுத்தி விட்டுச் சென்றன.

அண்டை நாடான இந்திய காப்பாற்றும் என்றிருந்தபோது, அது சூர்ப்பனகையாக மாறி யுத்தம் நடப்பதற்கே மூல காரணமாயிற்று.

நிலைமை இதுவாக இருக்கையில், போர்க் கொடுமையில் இருந்தும் அடக்குமுறையில் இருந்தும் மக்களை பாதுகாக்குகின்ற ஐ.நா சபை, ஈழத் தமிழர்களின் விடயத்தில் மட்டும் அநீதி இழைத்தது.

நாராயணன் கொடுமை செய்ய; விஜய் நம்பியார் துரோகம் இழைக்க; நிலைமையை நேரில் பார்க்க வந்த ஐ.நா செயலாளர் பான் கீ மூனும் தன் கண்களை இறுக்கி மூடி தன் கரங்களை நீட்டி மடக்கிக் கொண்டமை கொடுமையிலும் கொடுமை.

ஈழத் தமிழர்களின் விடயத்தில் மத்திய அரசை நம்பியது பெரும் தவறு என்று கலைஞர் கூறுவதும், ஈழத் தமிழர்களின் விடயத்தில் நாங்கள் பொறுப்பற்ற முறையில் நடந்துவிட்டோம் என்று பான் கி மூன் நீலிக் கண்ணீர் வடிப்பதும், யுத்தத்தின்போது, எங்கள் பச்சிளம் குழந்தைகள் கோரமாக கொல்லப்பட்ட துன்பத்தைவிட பன்மடங்கு வேதனை தருவதாகும்.

பொறுப்பான பதவிகளில் இருந்துகொண்டு மனித உயிர்கள் கருக்கப்படும்போது கைக்குட்டையால் உங்கள் முகத்தை மறைத்துக் கொண்ட உங்கள் கொடுமை போதும். இவ்வுலகைப் படைத்தவன் அதனை அழிப்பதற்கு என்பதையாவது உணர்ந்து கொள்ளுங்கள்.

# ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



என்னுடனான புனிதத் தொடர்பு அற்றுப்போய் விட்டதால் உங்களுடைய இயல்பு பாவப்பட்டுவிட்டது. ஆனால் நான் என்னுடன் புனிதத் தொடர்பு கொள்ள நீங்கள் தேர்ந்தெடுக்கும் எந்த வழியிலாவது உங்களுடன் புனிதத் தொடர்பு கொள்கிறேன். உங்களுடைய பாவமான இயல்பு கர்மாவைச் சேர்த்துக்கொள்ள வைக்கின்றது. உங்களுடைய கர்மாவிலிருந்து உங்களால் வெளிவர இயலவில்லை. நீங்கள் வெளியிலும் உங்களுடைய கர்மாவாலேயே துயரப்படுகிறீர்கள். நீங்கள் என்னுடன் புனிதத் தொடர்பு கொண்டு உங்களுடைய துயரத்திலிருந்து வெளிவர இயலாத நிலையை உணர்ந்து என்னுடைய துணையை நாடினால் நான் இப்பொழுதே இங்கேயே உங்களை விடுவிப்பேன்.

# ஓர்க்கிட் கடத்திய தம்பதியர் கைது

(கொழும்பு)

சிங்கராஜவனத்திலிருந்து ஓர்க்கிட் மலர்களைக் கடத்தி செல்ல முயன்ற ரஷ்ய நாட்டு தம்பதியினர் வனப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிங்கராஜ வனத்திற்குச் சென்ற குறித்த தம்பதியினர் மிக அரிய வகை ஓர்க்கிட் மலர்களை கடத்திச் செல்ல முற்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவர் மீதும் சந்தேகம் கொண்ட வனப்பாதுகாப்பு அதிகாரிகள் இருவரையும் சோதனைக் குட்படுத்தினர்.

இந்நிலையில் 75 தொடக்கம் 100 வகையான ஓர்க்கிட் மலர்களை இவர்கள் கடத்திச் செல்ல முயன்றதாக வனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரு ரஷ்யப் பிரஜைகளும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## எல்லோரும் உயர்ந்தவர்தான்!



நமது உள்ளங்களை திறந்து வைத்திருந்தால் உலகிலுள்ள நல்ல நினைவுகள் அனைத்துக்கும் உரிமை உள்ளவர்களாகிவிடுவோம்.

நாம் செலுத்தும் பணிவுக்கும் மரியாதைக்கும் பிரதிபலனாக இறைவன் ஏதாவது ஒரு நலனைத் தரவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிற வரை உண்மையான பக்தி ஏற்படாது.


தன்னை அடக்கியாளப் பழகியவன் வெளியுலகிற்கு வசப்படமாட்டான். அடிமைத்தனமும் அவனிடம் இல்லை. அத்தகையவனே உலகத்தில் வாழத் தகுதி பெறுகிறான்.

மக்களின் எண்ணிக்கையே செல்வம். மாறாக வறுமை முக்கியமல்ல. சொல், செயல், சிந்தனைகளால் ஒன்றுபட்டு விளங்கும் ஒரு சிலரால் உலகையே ஆட்டிவைக்கமுடியும்.

கடலைப்பார்; அலையைப் பாராதே. எறும்பிற்கும் தேவதூதனுக்கும் இடையில் வேற்றுமை இல்லை. ஒவ்வொருவனும் தனது நிலையில் பெரியவனே.

இயற்கையை எதிர்த்துப் போராடி வளரவேண்டும். இயற்கையோடு புரியும் ஓயாப்போரே மனித முன்னேற்றத்தின் படிக்கல்லாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஞானம்ஸ் வி.க.சம்பியன்



தீபாவளியை முன்னிட்டு தம்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடத்திய 5 பந்துபரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது. கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் ஞானம்ஸ் அணியும் மாலுசந்தி மைக்கல் அணியும் விளையாடின. முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 5 பந்து பரிமாற்ற நிறைவில் 4 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 3.5 ஓவரில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஞானம்ஸ் அணியின் சார்பாக சுகந்தன் 28 ஓட்டங்களையும் துஸ்யந்தன் 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக சுகந்தனும் சுற்றுப்போட்டியின்தொடர் நாயகனாக சேந்திரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மாவட்டகளுக்கிடையிலான காற்பந்தாட்ட போட்டிகள்

மாவட்டங்களுக்கிடையிலானகாற்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாண மாவட்ட அணி கொழும்பு செல்கின்றது. இலங்கையின் இருபத்தைந்து மாவட்டங்களின், 21 வயதுப்பிரிவு அணியினருக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இம் மாதம் 22 ஆம் திகதியிலிருந்து கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாண மாவட்ட அணி எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு செல்லவுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட அணிக்கு பயிற்சியாளராக பா.முகுந்தன் அணியுடன் செல்கின்றார்.

## விளையாட்டு உபகரணம் கையளிப்பு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் உதைபந்தாட்டத் துறையினை வளர்க்கும் நோக்கில் யூனியன் கல்லூரியின் நோர்வே வாழ் பழைய மாணவர்களான திரு. திருமதி சிவபெருமான் இராஜா ஆகியோரினால் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான உதைபந்தாட்ட விளையாட்டு உபகரணங்கள் கல்லூரியின் உதைபந்தாட்ட அணிக்கு வழங்கப்பட்டுள்ளது. கல்லூரியின் 15,17,19 வயதுப் பிரிவு அணியினருக்கான சீருடைகள் 45, ஸ்ரொக்கிங் நெற் 15, யூட்ஸ் ஆகிய விளையாட்டு உபகரணங்களை கல்லூரி அதிபர் வே.க.இரத்தினகுமாரிடம் பழைய மாணவர்கள் கையளித்துள்ளனர். (21)

# சாதனை வீரனுக்கு கௌரவிக்கும் நிகழ்வு



அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகர் அல்பேர்ட் பாக்கில் நடைபெற்ற விக்டோரியா விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தல் போட்டியில் பங்கு பற்றிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரன் இரத்தினசிங்கம் செந்தூரன் இரண்டாம் இடத்தினை பெற்று வெள்ளிப்பதக்கத்தினை பெற்றுக் கொண்டார்.

இவரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன் கோயிலில் இருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வரை பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு காலை 7.30 மணியளவில் கல்லூரி முதல்வர் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது. நடைபெற்ற போட்டியில் 1.95 மீற்றர் உயரம் பாய்ந்து செந்தூரன் இரண்டாம் இடத்தினை பெற்றிருந்தார். இவர் தேசிய கனிஷ்ட பிரிவில் உயரம் பாய்தலில் 1.92 மீற்றர் உயரம் பாய்ந்து சாதனை நிகழ்த்தியிருந்தார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவில் நடை பெறும் விக்டோரியா மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கௌரவிக்கும் நிகழ்வில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டனர் .

# கொல்மஸ் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட போட்டி; யாழ்.இந்து, திருக்குடும்ப கன்னியர்மடம் சம்பியன்







வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்திய டபிள்யூ.ஆர்.கொல்மஸ் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் ஆகிய அணிகள் சம்பியன் ஆகின.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி யின் கூடைப்பந்தாட்டத் திடலில் அண்மையில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் முதலில் பெண்கள் மோதிக்கொண்டனர்.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடமும் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியும் மோதின.

இப்போட்டியின் முதல் இரண்டு சுற்றுக்களையும் இராமநாதன் மகளிர் அணி கைப்பற்றியது.

இறுதி சுற்றில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் 33:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 20:10 என்ற புள்ளி அடிப்படையில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலையை வென்றது.

பெண்களுக்கான பிரிவில் இறுதிப் போட்டியின் நாயகியாக யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடத்தைச் சேர்ந்த வெனிற்றாவும் சுற்றுப்போட்டியின் நாயகியாக மருதனார் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த குணதீபாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதின.

இப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 32:26 என்ற புள்ளி அடிப்படையில் மத்திய கல்லூரியினை வென்று சம்பினாகியது.மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 28:21 என்ற புள்ளி அடிப்படையில் சென். ஜோன்ஸ் கல்லூரியினை வீழ்த்தியது.

ஆண்களுக்கான பிரிவில் இறுதிப் போட்டியின் தொடர் நாயகனாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அனுசனும் சுற்றுப் போட்டியில் தொடர்நாயகனாக யாழ். மத்திய கல்லூரியின் தயாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றி அணிகளுக்கும் வீரர்களுக்குமான வெற்றிக் கிண்ணங்களை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்புகஸ்கந்தவில் எண்ணெய்க் கசிவு இருவர் பலி;11 பேர் காயம்

(கொழும்பு)

சப்புகஸ்கந்த கழிவு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நேற்றைய தினம் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவு காரணமாக இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

அதிலிருந்து வெளிப்பட்ட அதிக வாயுவினை சுவாசித்தமையினாலேயே இவ் உயிரிழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த 8 பேர் ராகம வைத்திய. சாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ந)

## இறுதி யுத்தம் ....

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஐக்கிய நாடுகள் சபை தொடர்பிலான விசேட அதிகாரி லூவிஸ் டயஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் சபை தமது பொறுப்புக்களை நிறைவேற்ற தவறியுள்ளமையை அதன் பொது செயலாளர் பான் கீ மூன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பில் சாள்ஸ் பெற்றி தயாரித்த உள்ளக அறிக்கை இலங்கையில் மனிதாபிமானத்துக்கு எதிரான யுத்த குற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இந்நிலை யில் பக்கச்சார்பற்ற விதத்தில் இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பிலும் மனித உரிமைகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (ந-11)

## வெலிக்கடை....

இந்த மோதலின்போது சில தேர்ந் தெடுக்கப்பட்ட கைதிகளை மட்டும் காவல்துறை அதிரடிப் படையினர் கொலை செய்ததாக பலத்த சந்தேகம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உள்நாட்டு விசாரணைக் குழுக்களால் சுதந்திரமாக விசாரணை நடத்த முடியாது என்று கருகிறோம்.

எனவே சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கண்காணிப்பில் இவ்விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கோருகின்றோம்.

நீதிமன்றத்தின் அனுமதியின்றி சிறைச்சாலைக்குள் அதிரடிப் படையினர் நுழைந்தது ஒரு சட்டவிரோத செயல். அதுமட்டுமல்லாது அரசுதான் செய்த தவறை ஊடகங்களை பயன்படுத்தி நியாயப்படுத்த நினைக்கின்றது என்றும் குற்றம் சாட்டினார் நாமல் ராஜபக்ஷ.

இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட இவ் அமைப்பின் செயலாளர் அருட்தந்தை சத்தியவேல் கருத்துத் தெரிவிக்கையில்,

வெலிக்கடையில் கொல்லப்பட்ட கைதிகளின் மரணச் சான்றிதழ்களை அவர்களின் உறவினர்களிடம் கையளிக்க அரசாங்கம் இதுவரை தவறியுள்ளதாகத் தெரிவித்த அருட்தந்தை, தாம் விரும்பிய இடத்திற்கு இராணுவத்தை அழைத்து அங்கு இருப்பவர்களை கொலை செய்யும் அளவிற்கு இது ஒரு அரச பயங்கரவாதம் எனவும், அன்று வடக்கு கிழக்கில் கிராமம் கிராமமாகச் சென்று தமிழ் மக்களை கொன்று குவித்த அரச பயங்கரவாதம், அன்று நாம் கூறியதுபோன்று இன்று தெற்கிலும் மக்களைக் கொலை செய்கிறது எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கொலை செய்யப்பட்ட கைதிகளின் உறவினர்களுக்கு அரசாங்கம் நட்டஈட்டை வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.(ந)

## உலக வங்கிப் பணிப்பாளர்....

விளான் பாடசாலைக்கு வருகைதரும் அவர், அத்துடன் சிறுப்பிட்டி ஜனசக்தி மீள் எழுச்சி கிராமத்தின் இரண்டாவது மீள் எழுச்சித் திட்டம் ஆகியவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்ட அபிவிருத்தி வேலைகளையும் பார்வையிடவுள்ளார்.

இதன்போது முக்கியமாக அடுத்த ஆண்டில் இலங்கைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் அவர் முக்கியமான கருத்துக்களை தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.(ந-11)

## இலங். எதிரான....

இலங்கை தொடர்பில் தற்போது இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு பதிலளித்த இணையமைச்சர், இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. அங்கு தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. இலங்கை அரசால் சர்வதேசத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் அடுத்த ஜெனிவா கூட்டத் தொடரின்போது இலங்கைக்கு எதிரான தீர்மானம் பிரயோகிக்கப்பட்டால் அதனை இந்தியா மீண்டும் ஆதரிக்கும் என திட்டவட்டமாக இணையமைச்சர் நாராயணசாமி குறிப்பிட்டார்.(ந-11)

## தலைமை நீதிபதிக்கு....

விடுத்திருக்கும் விரிவான அறிக்கையில் இலங்கையில் நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அலுவலர்கள் மீதான அழுத்தங்கள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பான செய்திகள் தொடர்பில் அவர் ஆழ்ந்த கவலை வெளியிட்டிருக்கிறார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை நீதித்துறையின் சுயாதீனத் தன்மை மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், பதில் நடவடிக்கைகள் மற்றும் தலையீடுகளின் ஒருபகுதியாகவே இந்த நடவடிக்கைகள் அமைவதாக கருத வேண்டியுள்ளது.

இலங்கை நீதித்துறை அதிகாரிகள் மீது நேரடி தாக்குதல்களோ மறைமுக அழுத்தங்களோ இல்லாமல் அவர்கள் தங்களின் தொழில் ரீதியிலான அலுவல்களை எந்தவித அச்சமும், முறையற்ற தலையீடும் வெளியார் அழுத்தங்களும் இல்லாமலும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கு அமையும் வகையிலும் செய்யக்கூடிய சூழலை இலங்கை அரசு உருவாக்க வேண்டும்.

இலங்கை நீதிபதிகளை பதவி நீக்கம் செய்யமுடியாத தன்மையானது அந்நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மையை தாங்கும் முக்கிய தூணாக இருக்கின்றது.

மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே இந்த கொள்கையில் தலையீடுகள் இருக்க வேண்டும்.

தலைமைநீதியரசர்ஷிராணிபண்டாரநாயக்க மீதான பதவி நீக்க நடவடிக்கைகள் எமக்கு சங்கடங்களை ஏற்படுத்தியுள்ளது என்றார். மேலும் சுயாதீனமான நீதிபதிகளை பழிவாங்குவதற்கான ஒரு வழிமுறையாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை பயன்படுத்துவதை ஏற்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-11)


### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2011/2012 (வெளிவாரி)**

Bachelor of Business Management (Online) Degree Programme - 2011/2012

**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை- 2011**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினூடாக நடத்தப்படும் தமிழ்மொழி மூலமான மூன்றுவருட இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள் :**

- க.பொ.த.(உ/த) பரீட்சை - 2010 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்
  அல்லது
- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**முக்கிய குறிப்பு:** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவுசெய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல் :**

1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெறவிரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக்கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா. 250 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட ரூபா 250 இற்கான காசுக்கட்டளை/தபால் கட்டளையை சுயமுகவரியிடப்பட்ட ரூபா 40 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25X20 செ.மீ.அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளமுடியும்.
2. விண்ணப்பப்படிவத்தினை www.jfn.ac.lk/bbm எனும் இணைய முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **'இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு'** என தெளிவாகக் குறிப்பிடப்படல்வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 28.12.2012**

மேலதிக விபரங்களுக்கு :

021 222 1106, 021 222 3610, 021 222 3612

என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்புகொள்ளவும்

பதிவாளர்
*12.11.2012*



நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

### குத்தகைக்கான மீள்கேள்வி அறிவித்தல்

27.10.2012ம் திகதி செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் 2013ம் ஆண்டுக்கு பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு மீள்கேள்வி கோரப்படுகின்றது.

**மீள்கேள்வி அட்டவணை**

| இல. | சந்தைகள், (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்) இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் • பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 01 | திருநெல்வேலிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 15,825,600.00 |
| 02 | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 210,000.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 01 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 789,810.00 |
| 02 | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 630,110.00 |
| 03 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 139,125.00 |
| 04 | கொக்குவில் உப அலுவலக இல. 329, பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 161,700.00 |

**கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :** 28.11.2012 புதன்கிழமை மு.ப. 12.00 மணிவரை
**கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :** 29.11.2012 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை,
**கேள்வி திறக்கும் திகதி :** 29.11.2012 வியாழக்கிழமை பி.ப 2.00 மணி

**குத்தகை தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
15.11.2012

(C-1546)

ப. வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L.L. NO. 2490
**DOHA QATAR** நாட்டில் உடனடி **வேலைவாய்ப்பு**

உங்கள் வாழ்வுக்கு ஒளியூட்டுமுகமாக இலங்கை அரசாங்கத்தினாலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்ட **Air Trust** வெளிநாட்டு முகவர் நிறுவனத்தினால் இம்மாதம் 17ஆம் திகதி *Green Grass Hotel* யாழ்ப்பாணத்திலும், 18 ஆம் திகதி *Star Rest* கிளிநொச்சி பரந்தனிலும் காலை 09.00 மணியிலிருந்து 05.00 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க்காணும் தகுதியுடையவர்கள் உடன் நேரில் வரவும். (C1478)

குறிப்பு: டிக்கட், பியீரோ உட்பட விஸா கிடைத்தவுடன் மொத்தக் கட்டணமாக ரூபா 60 ஆயிரம் மட்டுமே அறவிடப்படும். House Maid (வீட்டுப் பணிப்பெண்களுக்கு 06 மாத சம்பளம் முற்பணமாகவும் மற்றும் அனைத்து செலவுகளும் முற்றிலும் இலவசமாக செய்து அனுப்பிவைக்கப்படும்.

| JOB | QTY | SALARY (Q.R) |
|---|---|---|
| மேஷன் (Mason) | 75 | 1,200-1,500 |
| இலக்ரிஷியன் (Electrician) | 20 | 1,200-2,000 |
| கார்பென்டர் (Carpenter) | 28 | 1,200-1,500 |
| பெயின்டர் (Painter) | 18 | 1,000-1,200 |
| கம்பிக் கூடு கட்டுபவர்கள் (Steel Fixer) | 32 | 900-1,000 |
| உதவியாளர்கள் (Helpers) | 112 | 900-1,000 |
| சுத்திகரிப்பாளர்கள் (Cleaners) | 96 | 800-900 |
| சமையல்செய்பவர்கள் (Cook) | 05 | 1,000-1,200 |
| கணக்காளர் (Accountant) | 08 | 1,200-2,000 |
| சாரதிமார்கள் (Drivers) | 55 | 1,200-1,600 |
| A/C Technician | 16 | 1,200-2,000 |
| Welders | 12 | 1,200-2,000 |
| Marketing 1 QR = Rs. 36.75 | 12 | 1,200-,4,000 |

சலுகைகளும் விதிமுறைகளும்
இலவசம்
தங்குமிடம்
போக்குவரத்து
மருத்துவ வசதி
மேலதிக நேரம் உண்டு.
நாளாந்த வேலை நேரம் 8 மணித்தியாலங்கள்

17ம் திகதி
Green Grass Hotel
#33, Aasirwatham Lane,
Hospital Road, Jaffna.

18ம் திகதி
Star Rest
Kandy Road,
(Paranthan) Kilinochchi.

பதிவுகளுக்கு விரையுங்கள்
**AIR TRUST**
OVERSEAS MAN POWER CONSULTANT
#985, 1ST FLOOR MARADANA RD,
BORELLA, COLOMBO -08
011 - 2676777, 075 0650084



**French Language Centre**
Easy Way to Learn French

FRENCH CLASSES – பிரெஞ்சு வகுப்புக்கள்

French கதைப்பதற்கு 100% உத்தரவாதம். Speaking, Listening, Reading, Writing தனித்தனி கவனம் செலுத்தப்படும்..
600க்கும் மேற்பட்ட மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் எமது நிறுவன ஆசிரியரிடம் French கற்றுச் சென்றுள்ளனர்
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Trainning in France) T.P: 0779789 456

No.23, Palaly Road, Jaffna.
(ஆரியகுளத்திற்கு அண்மையில்)
பிரிவு 1 Sat,Sun 10am (24.11.12)
பிரிவு 11 Mon,Tue 11am(26.11.12)

M.M.V வீதி, காளி கோவிலடி
நெல்லியடி.
பிரிவு 1 Mon,Tue 3.30pm(26.11.12)
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

Germen, Swiss (Deutsch) வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (C-1547)


## ஜனாதிபதி...

பிரதிநிதிகளும், திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 19ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களை பார்வையிடவுள்ளதுடன் நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்த அபிவிருத்தி நிறுவனம் எவ்வாறு கூடுதலான ஒத்துழைப்புகளை வழங்கலாம் என்பது தொடர்பிலும் ஆராயவிருக்கின்றார். (ந-1)

## ஐ.நா. பணி...

நாடுகள் அமைப்பின் உயரதிகாரி சுசனா மெல்கொரா தெரிவித்துள்ளார்.

சில தகவல்கள் உள்ளகத் தேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் அவற்றை பகிரங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளக அறிக்கைகளின் சகல விடயங்களையும் பகிரங்கப்படுத்துவது பொருத்தமான தீர்மானமாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில தகவல்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பணியாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவற்றை பகிரங்கப்படுத்துவது பொருத்தமாகாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பக்கச்சார்பற்ற வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும் என்பதில் ஐக்கிய நாடுகள் அமைப்பு கூடுதல் சிரத்தை எடுத்துக் கொண்டதாக சுசனா மெல்கொரா தெரிவித்துள்ளார். (ந-1)


**ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா சட்ட ஆலோசனையின் இறுதிநாள் 15.12.2012**

*ஏன் இந்தக் காலக்கெடுவினுள் நாம் திசைகாட்டியில் ஆலோசனை பெற்றாக வேண்டும்?*

**தனித்துவமானவர்கள்**

ஆம்! வடபுலத்தில் மேற்படி ஆலோசனைத்துறையில் பலவித வெற்றிகளை ஈட்டி சாதனை படைத்துவரும் ஒரேயொரு நிறுவனம் திசைகாட்டி மட்டுமே.

**முதலுக்கு மோசமில்லை**

முற்பணமோ பிற்பணமோ கொடுத்தவர் கேட்ட கணத்தில் மீளளிப்பு என்பதற்கிணங்க ஊரறிய பல இலட்சங்களை திருப்பிக்கொடுத்ததன் மூலம் தாம் முன்மாதிரியானவர்கள் என்பதை நிரூபித்தவர்கள். எனவே உங்கள் முதலுக்கு மோசமில்லைத்தானே.

**மீள எப்போ ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை?**

கௌரவ இயக்குநர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் இதுவரை கிடைக்கப்பெற்ற விசேட ஆலோசனை செயற்திட்டத்திற்குரிய பல நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களிற்கு பரிகாரம் கண்ட பின்பே மீள ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை உள்ளதால் மீளவும ஆலோசனை வழங்கல் எப்போ ஆரம்பிக்கப்படுமோ தெரியவில்லை.

இன்னும் என்ன தாமதம் கறைபடியாத வரலாற்றைக் கொண்ட பகிரங்கத்தன்மையான முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான உங்கள் திசைகாட்டியிடம் விரைந்து வாருங்கள்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**
(PV 82703)
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 021 221 9016



(C-1548)



**ACCA** புதிய பிரிவுகள் ஆரம்பம் **01.12.2012**

*Association of Chartered Certified Accountants*

ACCA
யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்
இல.7, பலாலி வீதி (அப்பலோ வைத்தியசாலை முன்பாக யாழ்ப்பாணம்)

ACCA
கற்கை வழிகாட்டல் அலகு,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: T.P: 021 567 0345

(981)


# மரண அறிவித்தல்



## திருமதி நகுலாம்பிகை நடராசா

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், மண்டைதீவை வாழ்விடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலாம்பிகை நடராசா 15.11.2012 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-முத்துப் பிள்ளையின்கனிஸ்ட புதல்வியும் மோகனராஜ் (அஞ்சல் அதிபர்- அஞ்சல் அலுவலகம்- மானிப்பாய்) கந்தலீலா (ஆசிரியர் - யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிறேமா (முகாமைத்துவ பங்காளர் - கஜன் கொன்ஸ்ரக்ஷன்) அவர்களின் அன்பு மாமியாரும் தருண்ராஜ், பிரதிஷ்காவின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேயபிள்ளை, பாக்கியலட்சுமி, அன்னலட்சுமி, பராசக்தியம்மா, நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2012) சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கஜன் கொன்ஸ்ரக்ஷன்**
*205, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.*

தகவல்:
மகன் ந.மோகனராஜ்

(979)



## நீங்காத நினைவில்....

# ஓராண்டு நினைவஞ்சலி

## பூதப்பிள்ளை காசிநாதர்

(இயக்குனர் - KSN Engineering (Pvt) Ltd)

**பிறப்பு: 1947.01.07**
**இறப்பு: 2011.11.28**
*திதி: வளர்பிறை சதுர்த்தி*



ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ இம்மானிலத்தே
எங்களை வாழவைத்த எங்கள்
அன்புத் தந்தையே நீங்கள் எம்மை
விட்டுப் பிரிந்து சென்று ஓராண்டு காலம்
சென்றாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எங்களை விட்டு அகலாது அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்
வல்ல கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர்
பெருமானை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்**
*22, பிறவுண் வீதி,*
*[illegible]சந்தி, யாழ்ப்பாணம்.*

(978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.